காலைக்கதிர்
Kālaikathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 22 வியாழக்கிழமை 04.06.2020 கதிர் 211

### இனி இது ரகசியம் அல்ல!

அரசாங்கத்தின் தொழில் நுட்பம் சார்ந்த ஒரு கட்டமைப்பிலிருந்து ஒரு முக்கிய பிரமுகர் ஒருவர் கடந்த வாரம் திடீரென இராஜினாமாச் செய்தார்.

கணினி தொழில்நுட்ப விடயத்தில் பெரிதும் மதிக்கப்படும் ஒரு திறமைசாலி. பக்கம் 02

# இராணுவப் பிடிக்குள் நாட்டை சிக்க வைக்கின்றார் கோட்டா

## கூட்டமைப்பு கடும் கண்டனம்

**தேசிய ரீதியில் படைத்தரப்பை மட்டும் கொண்ட விசேட ஜனாதிபதி செயலணி ஒன்றையும், கிழக்கில் தொல்லியல் பாதுகாப்புக்கு என்ற பெயரில் படைத் தரப்பினர், பிக்குமார் உள்ளிட்ட சிங்களவர்களை மட்டும் கொண்ட விசேட செயலணி ஒன்றையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்கியுள்ளர். இவை நாட்டை சிங்கள மயமாக்குதல், பௌத்த மயமாக்குதல், இராணுவப் பிடிக்குள் வைத்திருத்தல் என்ற நிகழ்ச்சி நிரல்களின் வெளிப்பாடே.**

**- இவ்வாறு ஜனாதிபதியின் நடவடிக்கையை சீற்றத்துடன் கண்டித்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.** 3

## தேர்தலுக்கு நாம் 'ரெடி'

### விரைவில் நடத்துங்கள் என அரசிடம் ரணில் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 04

நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாங்களும் தயாராகிவிட்டோம். எனவே, அரசும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் விரைவில் தேர்தலை நடத்த வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

### அரசியலில் நிரந்தர நண்பன் - எதிரி கிடையாது

## ராஜபக்ஷக்களுடன் இணைந்து பெரு வெற்றியைப் பெறுவோம்

### இப்படி சொல்கின்றார் மைத்திரி



கொழும்பு, ஜூன் 04

கடந்த அரசுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளே நான் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவதற்குக் காரணமாகியிருக்கின்றன. அரசியலில் நிரந்தர நண்பனோ, நிரந்தர எதிரியோ கிடையாது. இது நமது நாட்டுக்கு மாத்திரமன்றி உலக அரசியலுக் கும் நன்கு பொருந்தும். ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச்செய்யும் நோக்குடன் செயற்பட்டோம். எதிர்வரும் பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன 3

## நிதி நிறுவனங்கள் வீழ்ச்சிக்கு பொறுப்பு மத்திய வங்கியே!

### அடித்துச் சொல்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 04

இலங்கை மத்திய வங்கியின் கீழ் இயங்கும் நிதி நிறுவனங்களின் வீழ்ச்சிக்கான பொறுப்பை மத்திய வங்கியே ஏற்றுக் கொள்ளவேண்டும் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

த பினான்ஸ் நிறுவனத்தின் தற்போதைய நிலைமை குறித்து நேற்று பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைக் கூறினார்.

மத்திய வங்கியின் கீழ் இயங்கும் நிதி நிறுவனங்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியுறுதல் மற்றும் அத்தகைய 3

## ஐ.தே.கட்சியின் அழிவுக்கு சஜித்தே முழுப் பொறுப்பு

### இப்படிச் சொல்கிறார் நாமல்



கொழும்பு, ஜூன் 04

ஐக்கிய தேசியக் கட்சியின் அழிவுக்கு சஜித் பிரேமதாஸ பொறுப்புக் கூறவேண்டும். தலைமைக்கு எதிராகத் தலைமையுடன் மோதிக் கட்சியை மாத்திரமல்ல, மாவட்ட மக்களையும் காட்டிக்கொடுத்துவிட்டு மாவட்டத்தைக் கைவிட்டு சென்றுள்ளார். 2

### வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவே இல்லை

## வறுமையால் அதிக மக்கள் உயிரிழக்க நேரிடும் ஆபத்து

### ஐ.தே.க. தலைவர் ரணில் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 04

ராஜபக்ஷ அரசால் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசின் ஆட்சி தொடர்ந்தால் மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்காவிட்டாலும் வறுமையின் காரணமாக உயிரிழக்க 3

## மாதாவின் சொரூபத்தை சேதப்படுத்தியவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள அடைக்கலமாதா தேவாலயத்தின் திருசொரூபததை உடைத்து சேதப்படுத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார். கோவிலின் மூலையில் அமைக்கப்பட்டிருந்த இந்தச் சொரூபம் மக்களின் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலையில் உடைக்கப்பட்டுள்ளது. 2

## அல்வாயில் 2 வயதுச் சிறுமி நேற்றிரவு கடத்தப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஜூன் 04

வடமராட்சி, அல்வாய் பகுதியில் நேற்று இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த இரண்டு வயதுடைய ஆர்கலி என்ற சிறுமி கடத்தப்பட்டுள்ளார் எனச் சிறுமியின் தாய் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

சிறுமி உணவு அருந்திக்கொண்டிருந்தவேளை மின்சாரம் தடைப்பட்டதாகவும், அவ்வேளை சிறுமி அழுத சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தபோது சிறுமியைக் காணவில்லை என்றும், சிலர் மதிலால் கடந்து சென்றதைப் பார்வையிட்டதாகவும் தாயார் 2

### இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னுடைய தனித் திறமை மூலம் ஒரு பிரபல கணினி தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வருபவர் அவர். அரசுத் துறையில் மதிப் பார்ந்த இயக்குநர் பதவியிலிருந்து அவர் வெளியேறியமையால் அந்தப் பின் புலத்தில் சில ஆங்கில நாளோடுகள் அதைச் செய்தியாக்கியிருந்தன. அரசுக் கட்டமைப்பில் குளறுபடிகள், குத்து வெட்டுகள், முறைகேடுகள் இருந்தமை யால் அதைத் தாங்க முடியாது அவர் வெளியேறினார் என்ற சாரப்பட செய்தி கள் வெளியாகின.

அவரது தனிப்பட்ட புளொக் (இணை யம்) பக்கத்திலும் அரசுத் தரப்பின் முறைகேடுகளுக்குத் தாம் அடி பணிய மாட்டார் என்ற குறிப்புகள் இருந்தன.

இந்த விடயத்தை ஊடுருவிப் பார்த்த ஊடக நண்பர் ஒருவர் அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டார். விவரம் இது தான்:-

புதிய ஜனாதிபதி கோட்டாபய பதவிக்கு வந்ததும் இலங்கை ஆட்சி முறைமை களில் பல மாற்றங்களைக் கொண்டு வர விரும்பினார்.

அதில் முக்கியமானது கணினி மயப்ப டுத்தப்பட்ட அடையாள அட்டை விநியோ த்தல்.

நாட்டில் உள்ள அனைவருக்கும் இந்த அடையாள அட்டை விநியோ கிக்கப்படும். அவர் பற்றிய சகல விடயங் களும் அந்த அடையாள அட்டை இலக்கத்தில் கணினி மயப்படுத்தப் பட்டிருக்கும்.

அவரவர்களின் பிறப்புச் சான்றிதழ் விவரத்தில் இருந்து, சாரதி லைசென்ஸ் இலக்கம், காணி, பூமி சொத்துக்கள், வாகனங்கள், கைத்தொலைபேசி இலக்கங்கள், வதிவிட விவரங்கள், குடும்ப விவரங்கள், கல்வித் தகைமைகள், பட்டங்கள், சாதனைகள், வருமானம், வருமான வரி விவரங்கள், கைரேகை அடையாளங்கள் போன்றவை அனைத் தும் இந்த அடையாள அட்டையை ஒட்டி சேமிக்கப்பட்டிருக்கும்.

அதாவது ஒருவரின் அடையாள அட்டை இலக்கத்தைக் கொடுத்தால் அவர் தொடர்பில் 'அ' முதல் 'ஃ' வரையான சகல விடயங்களும் கொண்டதான ஒரு கணினிப் பதிவு முறைதான் ஜனாதிபதி கோட்டாவின் திட்டம்.

இந்த விடயத்தைக் கையாளும் பொறுப்பு தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் அமைப்பு (ICTA) என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த அரச நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் இருந்தே இத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற அந்தப் பிரமுகர் திடீரென்று விலகியிருக்கின்றார்.

ஏன் தெரியுமா?

கணினி மயப்படுத்தப்பட்ட இந்த அடையாள அட்டை நாட்டில் உள்ள அனைவருக்கும் வழங்குவதற்கான திட்டத்தை பல நூறு பில்லியன் டொலரில் (கவனிக்கவும் பில்லியன் டொலரில்) செயற்படுத்த முடிவாயிற்று. அத்தோடு சாரதி லைசென்ஸ் வழங்கலையும், ரயில்வே டிக்கெட் வழங்கும் முறைமை யையும் சேர்த்து முன்னெடுக்கத் தீர் மானிக்கப்பட்டது.

இந்தப் பெரிய கணினி மயப்படுத் திய திட்டத்தை முன்னெடுக்கும் பொறுப்பு உரிய கேள்விப்பத்திரக் கோரலின்றி - முறையின்றி - ஒரு வெளிநாட்டு நிறுவ னத்துக்கு வழங்க முடிவு செய்யப்பட்டி ருக்கின்றது.

இத்தனையாயிரம் கோடி ரூபா பெறுமதியான திட்டத்தை ஒழுங்கான கேள்விப் பத்திரக் கோரலின்றி, அதிக விலைக்கு, தரச் சான்றிதழ் பெறாத வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்குக் காதும் காதும் வைத்தால் போலக் கொடுக் கும் சதித் திட்டத்துக்குத் தாம் உடன்பட முடியாது என்று கருதியே அவர் மேற்படி விட யத்துக்குப் பொறுப்பான நிறுவனத் தின் பணிப்பாளர் சபையிலிருந்து விலகிக் கொண்டிருக்கின்றார்.

அந்த நிறுவனம் எந்த நாட்டைச் சேர்ந்தது தெரியுமா?

பாகிஸ்தானைச் சேர்ந்ததாம்!

எமது நாட்டின் ஒவ்வொரு பிரஜை களினதும் உள்ளார்ந்தங்களைக் கையாளும் கணினி வடிவமைப்பு, நிர்வாக சேவை, அதன் பராமரிப்பு முகாமைத் துவம் போன்ற விவகாரங்களை பாகிஸ் தான் நிறுவனத்திடம் ஒப்படைப்பது மிக மிக ஆபத்தானது, அதற்கு நான் ஒத்துழைக்க மாட்டேன் என்று கூறிவிட் டுத்தான் விடயத்திலிருந்து சத்தம் சந் தடியின்றி கழன்றிருக்கின்றார் அந்த இலங்கை நாட்டுக் கலாநிதி.

இந்த விடயத்தை இப்படிப் பகிரங்க மாக போட்டுடைத்தமைக்காக ஜனாதி பதி புதிதாக நியமித்திருக்கும் செயலணி முதல் விடயமாக இந்த விவகாரத்தை அம்பலப்படுத்திய என்னைக் கையாள் வதுதான் தனது முதல் பணி என்று ஆரம்பிக்குமோ என்னமோ!

ஆனால், எப்படியும் பக்கத்து வீட் டுக்காரர்கள் எனது இந்தத் தகவல் குறித்து நிச்சயம் கவனம் எடுப்பார்கள். இனி இது அவர்கள் வீட்டுப் பிரச்சினையல்லவா....?

– மின்னல் –

### ஐ.தே.கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இப்படிக் கூறியிருக்கிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

செய்தியாளர்கள் எழுப்பிய கேள் விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

சகல தரப்பினரின் நிலைப்பாடுகளை ஆராய்ந்து நாடு மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்த இந்தச் சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் தலையிட் டுள்ளமை குறித்து நாங்கள் மகிழ்ச்சிய டைகின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேவையை நிறைவேற்றவே பெரும்பாலும் தேர்தல் ஆணைக்குழு முயற்சித்தது. முடிந்த வரை தேர்தலை ஒத்திவைக்கவேண் டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம். ஐக்கிய தேசியக் கட்சியின ருக்கு தேவையான வகையில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய அவர்கள் தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்தனர். இதனையே நாங்கள் பார்த்தோம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு காரணமாக நாட்டு மக்கள் தமக்கான அரசை தற்போது தெரிவு செய்ய முடியும். தமக்கு தேவை யான பிரதிநிதிகளை நாடாளுமன்றத் துக்கு அனுப்பி வைக்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகளை கட்சிக்குள் தீர்க்க அந் தக் கட்சிக்கு தெரிந்திருக்கவேண்டும். எம்மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் குப்பைகளைத் தேட எமக்கு நேரமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் அழிவுக்கு சஜித் பிரேமதாஸ பொறுப்புக் கூற வேண் டும். தலைமைக்கு எதிராக தலைமை யுடன் மோதி கட்சியை மாத்திரமல்ல, மாவட்ட மக்களையும் காட்டிக்கொடுத்து விட்டு மாவட்டத்தைக் கைவிட்டு சென் றுள்ளார் - என்றார்.

### தேர்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு தரப்பினர் நினைப்பதுபோல் ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடாளும ன்றத் தேர்தலுக்கு அஞ்சவில்லை. அதை எதிர்கொள்ள நாம் தயாராகிவிட்டோம். இது தொடர்பில் இன்று தீர்க்கமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டோம்.

நாடாளுமன்றம் செயற்படாமல் ஆட்சி இடம்பெறுவது அரசமைப்புக்கு முரணான செயற்பாடாகும். அதனால் விரைவில் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன் றத்தைக் கூட்ட வேண்டும் - என்றார்.

# பதவிலியிலிருந்து உடன் விலக வேண்டும் ஹூல்!

## மஹிந்த அணி போர்க்கொடி; நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜூன் 04

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஆணைக்குழுவின் கூட்டுப் பொறுப்புக்குக் களங்கம் ஏற்படுத்தியுள் ளார். அரசியல் நோக்கங்களை அடிப்படை யாகக் கொண்டு இவர் செயற்படுகிறார் என குற்றஞ்சாட்டி இவருக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. ஆகவே, இவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியை சுயமாகத் துறக்க வேண்டும்.

- இவ்வாறு மஹிந்த அணியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து ரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என்பதே ஆளும் தரப்பினரின தும், பெரும்பாலான மக்களினதும் பிரதான அரசியல் எதிர்பார்ப்பாக உள்ளது. கொரோனா வைரஸுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுப்ப டுகின்றது. அவ்வாறாயின் பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தலை நடத்துவதில் தவறேதும் கிடையாது.

பொதுத்தேர்தலை விரைவாக நடத்த வேண்டிய பொறுப்பு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ண ஜீவன் ஹூல் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டுப்பொறுப்புக் குக் களங்கம் ஏற்படுத்தியுள்ளார் என்ற பின்னணியில் இவருக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. ஆகவே, இவர் சுயமாகப் பதவி துறப்பது பொருத்தமாக அமையும்.

பெருந்தோட்ட மக்கள் காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மகனுக்கு அரசியல் ரீதியில் உரிய ஆத ரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் போது அரசியல் ரீதியான பாடத்தை இயல்பாகவே கற்றுக்கொள்ளலாம்.

பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி அனைத்து இன மக் களின் ஆதரவையும் பெற்று பலமான அரசை ஸ்தாபிக்கும் - என்றார்.

# நகரசபையில் விடுமுறை பெறாது தேர்தலில் குதித்தவர் மாட்டினார்!

வவுனியா, ஜூன் 04

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்த லில் சுயேச்சைக் குழு உறுப்பினராகப் போட்டியிடவுள்ள வவுனியா நகர சபை உறுப்பினர், நகரசபை உறுப்புரிமையில் இருந்து விடுமுறை பெறாமல் இருந்துள் ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இலங்கைத் தேர்தல் விதிமுறைக ளின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற உறுப் பினராகவோ அல்லது அரச உத்தியோ கத்தராக உள்ள ஒருவர் தேர்தலில் பங்கேற்பதாக இருந்தால் குறித்த அரச பொறிமுறையின் தலைமைக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வழங்கி விடுமுறை பெற்றிருக்க வேண்டும்.

எனினும் வவுனியா நகரசபையின் உறுப்பினராகவும் வவுனியா பிரதேச செயலகத்தின் சமுர்த்தி உத்தியோகத் தராகவும் கடமையாற்றும் அப்துல் லரிப் என்பவர் தான் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துக்கு விடு முறைக் கோரிக்கையை வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழங்கி அனுமதி பெற்றிருந்தபோதிலும் மக்கள் பிரதிநிதியாகக் கடமையாற்றும் வவு னியா நகரசபை பிரதிநிதித்துவத்திற்கு விடுமுறை வழங்கவில்லை.

இவ்விடயம் தொடர்பாக அந்த நகர சபை உறுப்பினரிடம் கேட்டபோது,

தான் கடமையாற்றும் அரச பதவி யான சமுர்த்தி உத்தியோகத்தர் பதிவியில் இருந்து சட்டபூர்வமாக விடுமுறை பெற்றுள் ளதாகவும் நகரசபை உறுப்பினர் பதவிக்கு விடுமுறை விண்ணப்பம் அளிக்க வில்லை எனவும் ஒத்துக்கொண்டமையுடன் இரு மாதங்களுக்கான நகரசபை உறுப் பினருக்கான கொடுப்பனவை பெற்றுள் ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த இரு மாதக் கொடுப்பனவையும் நகரசபைக்கு மீளச் செலுத்தத் தான் தயாராக உள்ளார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளரிடம் தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளரான அப்துல் லரிப் தனது சமுர்த்தி உத்தியோகத்தர் பதவியில் இருந்து முறையாக விடுமுறை பெற்றுள் ளாரா எனக் கேட்டபோது -

தமக்கு விடுமுறைக்கான விண் ணப்பத்தை அவர் தந்ததாகவும் அதனை தலைமையகத்துக்கு அனுப்பியதாக வும் தெரிவித்தார்.

இதேவேளை நகரசபை தலைவர் இ.கௌதமனிடம் இது குறித்து கேட்டபோது,

அவர் அவ்வாறு எந்தக் கோரிக் கையையும் முன்வைக்கவில்லை. அவரது செயற்பாடுகள் சட்டத்திற்கு முர ணாக இருக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்க தயாராகவுள்ளோம் - என்றார்.

சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் அப்துல் லரிப் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடாக முன்னாள் அமைச்சர் ரிசாத் பதி யுதீனின் அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குறித்த நகரசபை உறுப்பினர் உள்ளூராட்சி மன்றத்திடம் முறையாக விடுமுறை பெறாது ஏமாற் றியிருந்தாரா என்ற கேள்வி மக்கள் மத்தி யில் எழுந்துள்ளது.

### மாதாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் நாட்டிலிருந்து வருகை தந்த ஒருவராலேயே சிலை உடைக்கப் பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அந்த நபரை யாழ்ப்பாணம் பொலி ஸார் கைது செய்துள்ளமையுடன் மேல திக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது மாதாவின் சொரூபம் பாது காப்பு நலன் கருதி அடைக்கல மாதா ஆலயத்தின் உட்பகுதிக்குள் கொண்டு சென்று வைக்கப்பட்டுள்ளது.

### அல்வாயில் 2 வயதுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சிறுமியின் தாயும் தந்தையும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், சிறுமி தாயுடன் வாழ்ந்து வரும் நிலையில் தந்தை தரப்பினர் அவ ரைக் கடத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதாகவும் தாயார் கூறியுள்ளார்.

## ராஜபக்ஷக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி யுடன் இணைந்து மாபெரும் வெற்றியொன்றை அடைந்துகொள்ளும் இலக்கை முன்நிறுத்திப் பிரசாரப் பணிகளை ஆரம்பிக்க இருக்கின்றோம்.

எமது இந்த இலக்கை கண்டிப்பாக வென்றெடுப்போம்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் எமது கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தல் பிரசார வேலைகளை கடந்த ஜனவரி மாதத்திலேயே ஆரம்பித்துவிட்ட போதிலும், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அவற்றை இடைநிறுத்தவேண்டியநிலையேற்பட்டது. அதன் மத்தியிலும் பிரதேச ரீதியான எம்மால் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தோம்.

இத்தருணத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜனாதிபதி, பிரதமர், இராணுவத்தளபதி, முப்படையினர், பொலிஸார், சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி கூறுகின்றோம்.

ஏனெனில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளித்திருக்கின்றன என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். அதன் காரணமாக தற்போதைய அரசுக்குமக்கள்மத்தியில்நன்மதிப்பொன்று காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச்செய்யும் நோக்குடன் செயற்பட்டோம். எதிர்வரும் பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து மாபெரும் வெற்றியொன்றை அடைந்துகொள்ளும் இலக்கை முன்நிறுத்தி பிரசாரப்பணிகளை ஆரம்பிக்க இருக்கின்றோம். எமது இந்த இலக்கை கண்டிப்பாக வென்றெடுப்போம்.

இம்முறை எதிர்த்தரப்பொன்று இல்லாமலேயே நாம் தேர்தலை பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளோம். எதிர்த்தரப்பினர் அவர்களுக்குள்ளேயே பிரிந்து நின்று முரண்பட்டுக்கொண்டி ருக்கிறார்கள். தமக்குள்ளேயே பிளவடைந்திருக்கும்அவர்களுக்குமக்கள்வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இந்தநிலை பொதுத்தேர்தலில் எமக்குச் சாதகமாக அமையும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

பொதுத்தேர்தல் வெற்றியின் பின்னர் ஒரு ஸ்திரமான அரசை அமைத்து, சமூக மற்றும்பொருளாதாரப்பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கி, அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் ஆராயப்படும்.

இயற்கை அவ்வப்போது மனித சமுதாயத்துக்குத்தண்டனைகளைவழங்கும். அதிலிருந்து எவரும் தப்பவே முடியாது. எனினும், அதனால் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து மீண்டு உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதி என்பவற்றை அதிகரித்துப் பொருளாதாரத்தை வலுவூட்ட வேண்டிய தேவையிருக்கின்றது. அதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எமது கட்சி ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருக்கின்றது - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலளித்தார்.

கேள்வி:- எமது நாடு வெளிநாடுகளிடம் பெருமளவில் கடன் பெற்றுள்ள நிலையில், இவ்வருடம் ஒக்டோபர் மாதமளவில் பெருந்தொகையை மீளச்செலுத்த வேண்டியுள்ளதே. இதனை அரசு எவ்வாறு எதிர்கொள்ளும்?

பதில்:- உண்மையில் எமது நாடு எதிர்கொண்டிருப்பது ஒரு கடன் வலையாகும். நாட்டில் போர் நிலவிய காலகட்டத்தில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பெற்ற கடன்கள் உள்ளடங்கலாக சுமார் 3 தசாப்த காலத்துக்கும் மேலாகப் பெற்ற கடன்களே இவை. இதனை மீளச்செலுத்துதல் மற்றும் கையாளுதல் என்பன தொடர்பில் அரசு அமைத்த பின்னர் உரிய பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் கலந்தலோசிக்க வேண்டும்.

அதேவேளை தற்போது கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக முழு உலகுமே நெருக்கடியொன்றுக்குள் உள்ளது. எமது நாடு மாத்திரமன்றி, உலகநாடுகள் பலவும் கடன்தொகையை மீளச்செலுத்துவதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. எனவே, இத்தருணத்தில் கடன்களை மீளச்செலுத்துவதற்கான காலஅவகாசத்தைப்பெற்றுத்தரவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேசநிதியமைப்புக்களிடம்ஏற்கனவே கோரிக்கை வைத்திருந்தார். அத்தகைய சில வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

கேள்வி:- உங்களுடைய தரப்பு நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று, அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி, ஏகாதிபத்தியவாதம் ஒன்றை நோக்கிப் பயணிப்பதற்கு முயல்வதாகக் குற்றஞ்சுமத்தப்படுகின்றதே?

பதில்:- நாம் அத்தகைய திட்டங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. அரசமைப்பில் காணப்படும் குறைபாடுகளைத் திருத்தியமைப்பதே எமது நோக்கமாகும். அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் சிறந்த விடயங்களைப் போன்றே தீங்கான விடயங்களும் உள்ளன. உதாரணமாக சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டமை சிறந்த விடயமாகும். எனினும், அவை ஜனாதிபதிக்குக் கீழ் இயங்கவில்லை. மாறாக நாடாளுமன்றத்தின் அரசமைப்புப் பேரவையின் கீழேயே இயங்கின. அந்த ஆணைக்குழுக்கள் இயங்கும் முறை, அவற்றின் அதிகாரங்கள் மற்றும் வரையறைகள் உள்ளிட்ட கோவையைத் தயாரிக்குமாறு நான் கோரிக்கை விடுத்தேன். அதனை அவர்கள் செய்யவில்லை. ஏனெனில் சுயாதீன ஆணைக்குழுக்களின் ஊடாகத் தமக்குத் தேவையானவற்றைச் சாதித்துக் கொள்வதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

அதேபோன்று 19ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகருக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதனூடாக உண்மையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மாத்திரமே குறைக்கப்பட்டன. இவ்வாறு மூவர் மத்தியில் அதிகாரங்கள் பகிரப்பட்டமை முரண்பாடுகள் ஏற்படுவதற்கு வழி வகுத்தது. அவையே குறைபாடுக ளாகக் காணப்படுகின்றன.

கேள்வி:- ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், பதவிக்காலம் முடிவடைந்ததும் அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாகக் கூறிய நீங்கள் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடக் காரணம் என்ன? கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து ரணிலுடன் இணைந்த நீங்கள், எதிர்காலத்தில் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையும் வாய்ப்புள்ளதா?

பதில்:- கடந்த அரசுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளே நான் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவதற்குக் காரணமாகியிருக்கின்றன. அரசியலில் நிரந்தர நண்பனோ, நிரந்தர எதிரியோ கிடையாது. இது நமது நாட்டுக்கு மாத்திரமன்றி உலக அரசியலுக்கும் நன்கு பொருந்தும். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாம் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றியடையச் செய்வது எனத் தீர்மானித்து, அதற்காக முன்நின்று செயற்பட்டோம். அவ்வாறே அவர் வெற்றியடைந்து ஜனாதிபதியாகத் தெரிவானார். அப்போதைய எமது தீர்மானத்தில் தற்போதும் எவ்வித மாற்றமும் இல்லை. இம்முறை பொதுத்தேர்தலில் அரசின் வெற்றியை முன்நிறுத்தியே எமது பணிகளை மேற்கொள்வோம்.

கேள்வி:- ரோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு நீங்கள் தீர்மானித்தமைக்கான காரணம் பற்றி விளக்கமுடியுமா?

பதில்:- இதுபற்றி நான் ஏற்கனவே பல தடவைகள் கூறிவிட்டேன். என்னளவுக்கு வேறு எந்த ஜனாதிபதியும் பொதுமன்னிப்பு வழங்கியதில்லை. பொதுமன்னிப்பை நான் மாத்திரம் தன்னிச்சையாக வழங்கமுடியாது. உரிய தொடர்புடைய தரப்புக்கள் அனைவருடனும் கலந்துரையாடி ஆலோசனை பெறப்பட்டதன் பின்னரே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இது மிகவும் விரிவான விடயமாகும். எனவே, அது குறித்து பிறிதொரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

கேள்வி:- மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன மகேந்திரனைக் கைது செய்வதற்காக நீங்கள் 21 ஆயிரம் கையெழுத்துக்கள் இட்டமையால் ஏதேனும் பயனேற்பட்டுள்ளதா?

பதில்:- ஆரம்பத்தில் அர்ஜுன மகேந்திரன் பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்டிருப்பதாகவும், அவரைக் கைதுசெய்யுமாறும் கோரி நாம் சர்வதேச பொலிஸுக்கு (இன்டர்போல்) கடிதமொன்றை அனுப்பிவைத்தோம். எனினும், எமது அரசிலிருந்து வேறொரு தரப்பினர், இது பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பிரச்சினையல்ல என்றும், இது அரசியல் பிரச்சினை என்றும் கடிதம் அனுப்பினர்.

அதனால் இன்டர்போல் இதில் தலையிட முடியாது என்று எமக்கு அறிவித்தது. மீண்டும் இதுபற்றி விளக்கிக் கடிதமொன்றை அனுப்பிய பின்னரேயே அவர்கள்சிவப்புஅறிவித்தல்விடுத்தார்கள். எனினும், இந்த மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் ஊடாக நன்மையடைந்தவர்களே அவரைக் கைதுசெய்வதைத் திட்டமிட்டுக் குழப்பி வருகின்றார்கள். அவர்கள் யார் என்பது நாட்டு மக்கள் அவைருக்கும் தெரியும் - என்றார்.

## இராணுவப் பிடிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேற்றிரவு 'காலைக் கதிர்' நாளிதழுக்குக் கருத்து வெளியிட்டபோதே மேற்படி கண்டனத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய ஜனாதிபதியாகக் கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற காலம் தொடக்கம் நாட்டில் இராணுவ மயப்படுத்தப்பட்ட ஆட்சி முறையை நிறுவும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு அது உக்கிரமடைந்து வருகின்றது என்பதுதான் நிலைமை.

அதன் இன்னொரு வடிவம்தான் இப்போது ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டிக்கும் 'பாதுகாப்பான நாடு, ஒழுங்கமான - நீதியான - சட்டத்தை மதிக்கும் சமூகம் என்பவற்றைக் கட்டியயெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி' என்பதாகும்.

சட்டம் - ஒழுங்கைப் பேணுவது, போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவது போன்ற விடயங்களைக் கையாள்வதற்கு ஏற்கனவே சட்ட பூர்வமான நிறுவனங்கள் இருக்கின்றன. ஜனநாயக நாட்டிலே அதனைக் கையாளுவதற்கான முறைகளும் இருக்கின்றன.

அப்படி இருக்கையில், அவற்றைப் புறமொதுக்கி - அவற்றுக்கு சமாந்திரமாக - இன்னொரு செயலணியை ஜனாதிபதி உருவாக்குவது - ஜனநாயக கட்டமைப்பிலிருந்து விலகிச் சென்று ஓர் ஏகாதிபத்திய ஆட்சிமுறையை உருவாக்குவதற்குச் சமனாகும்.

உருவாக்கப்பட்ட இந்தச் செயலணியிலே 13 பேர். இராணுவம் உட்படப் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அதில் உறுப்பினர்கள்.

இந்த நாட்டில் இராணுவமயமாக்கல் நடப்பதை நிரூபிப்பதற்கு வேறு ஒரு சாட்சியம் தேவையில்லை. அதை ஊர்ஜிதப்படுத்துகின்றது இந்தச் செயலணி உருவாக்கம்.

நாட்டின் ஆட்சியின் கொள்கையையும் திசையையும் தீர்மானிப்பது அமைச்சரவை என்றே அரசமைப்புக் கூறுகின்றது. இப்போதும் காபந்து அரசாங்க அமைச்சரவை ஒன்று இருக்கின்றது.

அந்த அமைச்சரவையை மீறி, ஜனாதிபதி இப்படி ஒரு செயலணியை அமைத்திருப்பது அவர் நாடாளுமன்றத்துக்கும் பொறுப்புக் கூறாமல், அமைச்சரவைக்கும் பொறுப்புக் கூறாமல், முற்றும் முழுதாகத் தானாக மட்டும் செயற்படும் ஒரு போக்கைக் காண்பிக்கின்றது.

இந்தப் போக்கு நாட்டுக்கு, ஆட்சித் துறைக்கு, ஜனநாயகத்துக்கு பெரும் அபாயமாக அமைக்கின்றது.

கிழக்கில் தொல்லியில் துறைப் பாதுகாப்புக்கு என்ற பெயரில் உருவாக்கப்பட்டிருக்கின்ற விசேட ஜனாதிபதி செயலணியில் இடம் பெறுகின்ற பதினொரு பேரும் சிங்களவர்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தில் மிகப்பெரும்பான்மையாக வாழ்பவர்கள் தமிழ்ப் பேசும் மக்களே.

எனினும் ஒரு தமிழரோ, ஒரு முஸ்லிமோ கூட இல்லாமல் இந்தச் செயலணி உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் இராணுவத்தைச் சேர்ந்தோரும், பௌத்த பிக்குமாரும் உள்ளடங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே நாட்டை சிங்கள மயமாக்குதல், பௌத்த மயமாக்குதல், இராணுவப் பிடிக்குள் வைத்திருத்தல் என்ற நிகழ்ச்சி நிரல்களின் வெளிப்பாடாகவே இந்த விடயங்களை நாங்கள் பார்க்கின்றோம்.

இந்தப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றார் அவர்.

## நிதி நிறுவனங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் காரணமாக அரசு அதிருப்திக்குள்ளாகி இருப்பதுடன், இதனால் அரச நிதி நிறுவனங்கள் தொடர்பிலான மக்களின் நம்பிக்கை பழுதடைந்துள்ளதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

புதிதாகச் சட்டங்களை உருவாக்கி அல்லது அத்தகைய நிதி மோசடிகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் பிரதமர் மஹிந்த வலியுறுத்தினார்.

இதேவேளை, த பினான்ஸ் நிறுவனத்தின் பண வைப்பாளர்களின் நிதியை மீள்செலுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதுடன், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வைப்பாளர்களில் 97 வீதமானவர்களின் பணத்தைச் செலுத்தி முடிப்பதாகவும் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் எச்.ஏ. கருணாரத்ன குறிப்பிட்டார்.

## வறுமையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய உலக நாடுகள் வைரஸ் பரவலின் காரணமாக நெருக்கடியில் இருக்கும் மக்களுக்குச் சலுகைகளை வழங்கி வருகின்ற நிலையில் இலங்கையில் மாத்திரமே அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நெருக்கடி காரணமாக எதிர்வரும் காலத்தில் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி இருப்பதுடன், மக்களது வாழ்வாதாரத்துக்கும் சவால் ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் ஊதியம் பெறுபவர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறையினர் இன்று வருமானம் இன்றி பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஏனைய காலங்களையும் விட நாட்டின் வருமானம் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தியும் ஒன்பது சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

அரசால் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வழங்கப்படும் நிவாரணங்களை அரசியல் செயற்பாடுகள் இன்றி வழங்குமாறே தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியிருந்தது. நிவாரணங்களை வழங்க வேண்டாம் என்று கூறவில்லை.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் உதவிகளை அரசு மறைத்து வருகின்றது. எனவே, இந்த அரசின் ஆட்சி தொடர்ந்தால் மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழக்காவிட்டாலும், வறுமையின் காரணமாக உயிரிழக்க வேண்டி நேரிடும்-என்றார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இராணுவப் பிடிக்குள் நாடு

முன்னாள் படை அதிகாரி ஒருவரின் – முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒருவரின் – கைகளில் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒப்படைத்ததின் பயனை நாடு நேரடியாக அனுபவிக்கத் தொடங்கி விட்டது.

ஒரு புறம் சிறுபான்மையினருக்கு எதிரான பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்புப் போக்கு.

மறுபுறம் முழு நாட்டையுமே இராணுவப் பிடிக்குள் கொண்டு வரும் ஆதிக்க நடவடிக்கை.

ஒரு ஜனநாயக நாட்டில் முற்றிலும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர், நாட்டின் ஆட்சி முறைமையையே இராணுவக் கட்டமைப்புக்குள் சிக்க வைக்கும் அராஜகம் சத்தம் சந்தடியின்றி – எதிர்ப்பு அதிகமின்றி – சாதாரண போக்கில் – மெல்ல மெல்ல அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில் பிரிந்தவை தான் இந்தியாவும், பாகிஸ்தானும். இன்று இரண்டு தேசங்களிலும் ஜனநாயக ஆட்சி நிலவுகின்றது என்று கூறப்பட்டாலும் பாகிஸ்தானில் நிலவும் ஜனநாயக ஆட்சி எத்தகையது, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் நிலவும் ஜனநாயக ஆட்சி எத்தகையது என்பது நமக்கெல்லாம் தெரிந்த பாடம்தான்.

இன்றைய இலங்கை ஆட்சி முறைமை இந்திய ஜனநாயகத்திலிருந்து பாகிஸ்தான் ஜனநாயகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது கண்கூடான உண்மை.

ஜனநாயகப் போர்வையில் ஆட்சி அதிகாரத்தை இராணுவம் ருசிக்கத் தொடங்கினால் பிற்காலத்தில் விளைவுகள் விபரீதமாகவே முடியும். அது குறித்து யாரும் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை.

*'பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான, நீதியான, சட்டத்தை மதிக்கும் சமூகம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி'* என்ற பெயரில் இந்த விசேட செயலணி அமைக்கப்பட்டிருக்கின்றது.

வெளிப்படையாகப் பார்த்தால் சட்டம் – ஒழுங்கு விவகாரங்களைக் கையாளவும், போதைப்பொருள் கடத்தல் வர்த்தகத்துக்கு நிரந்தர முடிவு கட்டவும் இந்தச் செயலணி அமைக்கப்படுவதாகத் தெரிந்தாலும் இதற்குப் பின்னால் சூட்சுமான பல விடயங்கள் பொதிந்திருப்பதைக் காணலாம்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு தனியான அரச அமைப்புகள், அதிகாரிகள், ஜனநாயக ஒழுங்கு முறைகள் உள்ளன. அதேபோன்று போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கவும் தனித்துவமான ஏற்பாடுகள் உண்டு.

இவற்றைக் கையாள்வதற்கு இத்தகைய உயர்மட்ட செயலணி அவசியமல்ல. அந்த உயர்மட்ட செயலணிக்கு வழங்கப்பட்டிருக்கும் அளவற்ற அதிகாரங்கள் நுணுக்கமான சொல்லாடல்கள் மூலம் மறைக்கப்பட்டிருக்கின்றன.

*"அனைத்து அரச அதிகாரிகளையும் இந்தச் செயலணி தமது பணித் தேவைக்கேற்ப ஒத்துழைக்குமாறு அறிவுறுத்தலாம். அல்லது கோரிக்கை விடுக்கலாம். அப்படியான சமயத்தில் குறித்த நபர் அதனைக் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்"* – என்ற கட்டாயப்படுத்தல் ஒவ்வொரு அரச ஊழியருக்கும் விதிக்கப்படுகின்றது.

*"அப்படி செயலணியால் வழங்கப்படும் அறிவுறுத்தல் அல்லது கோரிக்கையை நிறைவேற்றப் பொது நிர்வாக அதிகாரிகள், அமைச்சு அலுவலர்கள், அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் தாமதித்தால் அல்லது நிறைவேற்றத் தவறினால் அது குறித்து செயலணி நேரடியாகத் எனக்கு அறிக்கையிட வேண்டும்"* – என்று அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய.

அதாவது, தமது நிறைவேற்று அதிகாரத்தை இராணுவத் தரப்பு அதிகாரிகளிடம் நுணுக்கமாகக் கையளிக்கும் தந்திரோபாயக் குறிப்பு இது.

சிவில் நிர்வாகம் மீதான ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் நுட்பமான முறையில் இராணுவ அதிகார வர்க்கத்திடம் – இராணுவ அதிகாரிகள் கொண்ட தரப்பிடம் – கைமாறும் பேராபத்து இந்த விடயத்துக்குள் பொதிந்து கிடக்கின்றது.

ஏற்கனவே நாட்டில் சிவில் அதிகாரிகளின் பதவிகளுக்கு – முக்கிய அமைச்சுகளின் செயலாளர் பதவிகள் உட்பட உயர் சிவில் சேவைத் தரங்களுக்கு – ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வரும் சூழலில் அவை எல்லாவற்றையும் மிஞ்சும் வகையில் – அனைத்து அரச அலுவலகங்கள், திணைக்களங்கள், அமைச்சுக்கள் மீது அதிகாரம் செலுத்தக் கூடிய விதத்தில் – உயர்படைக் கட்டமைப்பு ஒன்று அதிகார வலிமையோடு களத்தில் இறக்கப்படுகின்றது.

வினையைத் தேடி விதைக்கின்றார்கள். நாடு விரைவில் அதன் விளைவை அறுக்க வேண்டியிருக்கப் போகின்றது.

# மாவீர்களின் நினைவேந்தலை வன்முறை மூலம் தடுக்க முயற்சி

## முன்னாள் எம்பி. சிறிதரன் தெரிவிப்பு



மாவீரர்களின் நினைவுகூரலை வன்முறை மூலம் தடுக்க நினைக்கிறது அரசு என்று தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள தேராவில் மாவீரர் துயிலுமில்லத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் வனவளத் திணைக்களத்தினர் எல்லையிட்டு அந்தக் காணியில் இராணுவத்தினரால் மரக்கறிப் பயிர்ச் செய்கை செய்யப்படுகிறது.

அதனை நேரில் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சிறிதரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களின் வித்துடல்கள் இங்கு விதைக்கப்பட்டிருக்கின்றன. யுத்தம் நிறைவுற்றதன் பின்னர் 2015 ஆண்டிற்கு பின் இவ்விடத்தில் தங்கள் பிள்ளைகளை பெற்றோர் நினைவு கூர்ந்து வருகிறார்கள். இது தற்போது ஓர் அரச காரணியாக இருக்கிறது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 101ஆம் இலக்கத்தை உடைய இந்த பகுதி அரச காரணியாக ஒதுக்கப்பட்டுள்ளது. அரச காணியை வனவளத் திணைக்களம் தன்னுடையதாக அடையாளப்படுத்துவதாக இருந்தால் கிராம அலுவலர், பிரதேச செயலாளர் ஆகியோரின் அனுமதியுடனேயே அதனைச் செய்ய வேண்டும். அந்த நடைமுறைகள் எதுவுமின்றியே இந்தக் காணியை வனவளத் திணைக்களம் தன்வசப்படுத்தியிருக்கிறது.

வனவளப் பிரிவினால் எல்லைப்படுத்தப்பட்டால் அந்த இடத்திலிருந்து இராணுவமும் உடனடியாக வெளியேற வேண்டும்.

வனவளப்பிரிவு எல்லைப்படுத்திய பகுதிக்குள் இராணுவம் இருக்கலாம். ஆனால் எங்கள் மக்கள் அந்தப் பகுதிகளில் நெல் விதைக்க முடியாது, வேறு தோட்டங்களைச்செய்ய முடியாது. இது என்ன நியாயம்

எங்கள் மக்களின் மனஉணர்வுகளை உள்ள எண்ணங்களைப் புரிந்து கொள்ளாமல் இந்த அரசு நடந்து கொள்கின்ற முறைமைகள் மிகவும் பாதகமானது. குறிப்பாக வன்முறைக்கான அடையாளங்களை இப்போது ஆரம்பித்து இருக்கிறார்கள். கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த பிற்பாடு இராணுவ பிரசன்னங்கள், இராணுவ அதிகாரிகளினுடைய நியமனங்கள், அவர்களின் நடவடிக்கைகள் அனைத்துமே தாங்கள் செய்தால் யாரும் எதையும் கேட்க முடியாது என்னும் நிலைப்பாட்டில் செய்வது போன்றே தோன்றுகின்றன.

இவ்வாறாக எமது மக்களின் நினைவு கூரும் இடங்களையும் மெல்ல மெல்ல அபகரிக்க தொடங்கி இருக்கிறார்கள். இது தொடர்பில் நாம் சர்வதேச அமைப்புக்கள், உலக நாடுகளின் மனித நேய அமைப்புக்களிடம் அவற்றை மீட்டுத் தரும்படி கோரிக்கை முன்வைக்கிறோம்.

2015களில் ஜெனீவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களில் குற்றங்களை இழைத்த இராணுவத்தினரின் செயற்பாடுகளை விலாவாரியாக சொல்லப்பட்டிருக்கிறது. 'குற்றங்கள் இழைத்தவர்கள் அடையாளம் காணப்படுதல் குற்றத்திற்கான காரணங்கள்' மக்கள் தங்களின் பிள்ளைகளுக்கு வணக்கம் செலுத்துவது போன்ற விடயங்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

ஜெனீவா தீர்மானங்களில் இவ்விடயம் உள்ளடக்கப்பட்டு இருந்தும் இவற்றை எல்லாம் புறம் தள்ளி சர்வதேச சட்டங்களையும் சர்வதேச தீர்மானங்களையும் புறந்தள்ளி தான் போன போக்கில் இலங்கை அரசு நடக்க முயல்கிறது. இது அவர்களின் வழமையான செயற்பாடு. இருந்தாலும் சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து உரிய வகையில் நாம் இவற்றை கையாளுவோம் - எனவும் மேலும் தெரிவித்தார்.

# கொரோனாவுக்கு முடிவுகட்டிய பின்னரே நீதியான - அமைதியான பொதுத்தேர்தல்

## இதுவே ஜே.வி.பியின் எதிர்பார்ப்பு என்கிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஜூன் 04

நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயகம் பலப்படுத்தப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகக் காணப்பட்ட போதிலும், கொரோனா வைரஸ் பரவல் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டதன் பின்னர் நீதியானதும் அமைதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் ஆணைக்குழு அறிவிக்கும் தினத்தில் தேர்தலுக்கு முகங்கொடுக்கத் தயாராகவுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆனால், பொதுமக்களின் பாதுகாப்பு அதனைவிட முக்கியமானதாகும். மக்களின் பாதுகாப்பைக் கேள்விக்குட்படுத்த முடியாது. அத்தோடு தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களினதும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆலோசனைகளைக் கவனத்தில்கொண்டு தேர்தலுக்கு முன்னர் செயற்பட வேண்டிய விதம், தேர்தலின்போது செயற்பட வேண்டிய முறை மற்றும் தேர்தலின் பின்னர் செயற்படக் கூடிய முறை என்பன பற்றி ஆலோசனை வழிகாட்டல்கள் வெளியிடப்பட வேண்டும்.

அத்தோடு பிரசார நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது, வாக்களிப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள், தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதா, அதிகளவான வேட்பாளர்கள் போட்டியிடுவதால் வாக்கெண்ணும் செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்படும் என்பது பற்றி தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

அதற்கமைய தேசிய மக்கள் சக்தியாக மக்கள் விடுதலை முன்னணி பொதுத் தேர்தலுக்குத் தயாராகும். தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டவுடன் நாம் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்போம். நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நாட்டின் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்குத் தலைமைத்துவம் வகிக்கத் தயாராகவுள்ளோம் – என்றார்.

# ரோஹிஞ்சா முஸ்லிம்கள் முகாமில் பதிவானது கொரோனா உயிரிழப்பு



பங்களாதேஷின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ரோஹிஞ்சா முஸ்லிம்கள் முகாம் ஒன்றில் 71 வயது டைய முதியவர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளார். மியான்மரின் எல்லைப் பகுதியில் உள்ள காக்ஸ் பசார் என்கிற மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய அகதிகள் முகாமான குடுபலோங்கில் இந்த முதலாவது சாவு பதிவாகியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதிசெய்யப்பட்ட குறித்த முதியவர் அங்கிருக்கின்ற மருத்துவத் தொண்டு நிறுவனத்தால் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். தனிமைப்படுத்தப்பட்டிருந்த சமயமத்தில் வழங்கப்பட்ட சிகிச்சை பலனளிக்காது அவர் இறந்தார். உலகிலேயே அதிக அளவிலான அகதிகள் வாழும் அந்த முகாமில் இதுவரை 29 ரோஹிஞ்சா அகதிகளுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அங்கு வெறும் 339 பரிசோதனைகள் மட்டுமே இதுவரை மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## அமெ. விவகாரம் பாப்பரசர் உரை



அமெரிக்காவில் பொலிஸாரால் கொல்லப்பட்டதன் பின்னர் அமெரிக்காவில் ஏற்பட்ட பதற்றங்கள் குறித்துப் பாப்பரசர் பிரான்சிஸ் உரையாற்றினார். பிளாய்ட் உட்பட இனவெறி என்கிற பாவத்தின் விளைவாக இறந்த அனைவருக்கும் பிரார்த்தனை செய்வதாகப் பிரான்சிஸ் கூறினார். தனது உரையில் மேலும் அவர் தெரிவித்ததாவது: எந்தவொரு வடிவத்திலும் இன வெறியை நாம் சகித்துக்கொள்ளவோ அல்லது கண் மூடித்தனமாக இருக்கவோ முடியாது. ஆனால் ஒவ்வொரு மனித வாழ்க்கையின் புனிதத்தன்மையைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில், வன்முறை சுய அழிவு மற்றும் சுய - தோல்வி என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். வன்முறையால் எதுவும் பெறப்படவில்லை, எவ்வளவோ இழக்கப்படுகிறது. நாங்கள் விரும்பும் தேசிய நல்லிணக்கம் மற்றும் அமைதிக்காக கடவுளிடம் வேண்டிக்கொள்வோம் என்றார் பிரான்சிஸ்.

## வூகானில் மேலும் 15 பேருக்குக் கொரோனா

சீனாவில் கொரோனா வைரசின் பிறப்பிடமான வூகான் நகரில் புதிதாக 15 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அனைவருமே நோய் அறிகுறிகளுடன் இனங்காணப்பட்டுள்ளார்கள் என்று அந்த நாட்டின் சுகாதார ஆணையகம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட 15 பேரில் 5 பேர் வெளிநாடுகளில் இருந்து திரும்பியவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக வூகான் நகரில்; எந்தவித அறிகுறியும் இல்லாமல் சிலர் கொரோனா பாதிப்புக்கு ஆளாகிவந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் நகரில் உள்ள அனைவருக்கும் கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று முதன் முறையாக அறிகுறியுடன் 15 பேர் கண்டறியப்பட்டுள்ளனர்.

## கறுப்பினத்தவர் சாவைச் சித்திரிக்கும் மற்றொரு காணொளி பரவுகிறது



அமெரிக்காவில் பொலிஸாரால் கொல்லப்பட்ட கறுப்பின நபரான ஜோர்ச் பிளாய்ட் இறப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன் என்ன நடந்தது என்பதைச் சித்திரிக்கின்ற புதிய மறைகாணிக் காணொளி ஒன்று வெளியாகி அதிகம் பகிரப்பட்டுவருகிறது. இதுகுறித்துப் பிரபல ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டிருக்கும் செய்தியில், கடந்த 25ஆம் திகதி சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார், ஜோர்ச் பிளாய்ட்டைக் கீழே தள்ளி அவரைப் பரிதாபமாகக் கொன்றனர். அந்தச் சம்பவத்துக்கு முன்னர் (பொலிஸார் கீழே தள்ளிக் கைவிலங்கு போடுவதற்கு முன்) என்ன நடந்தது என்பது அங்கிருக்கின்ற கடையின் மறைகாணி ஒன்றில் பதிவாகியுள்ளது. அதில், பொலிஸார் ஜோர்ச் பிளாய்ட் டுடன் சண்டையிடுவது தெரிகிறது. அதில் அவரைக் குத்துவதும், தாக்குவதும் உள்ளது. அதன் பின்னரே பொலி ஸார் அவரை கீழே தள்ளி, கை விலங்கு போட முயற்சித்துள்ளனர். அவர் இறப்பதற்கு முன்னர் பொலிஸார் அவரை எப்படி நடத்தினர் என்பதை இது அதிகம் தெரிவிக்கிறது - என்றுள்ளது.

## பிரிட்டனின் மௌனம் வேதனைக்குரியது!

### விசனம் வெளியிட்டார் ஜெர்மி கோர்பின்



அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ச் பிளாய்ட் கொல்லப்பட்டதை எதிர்த்து மக்கள் முன்னெடுத்துவருகின்ற போராட்டங்கள் குறித்துப் பிரித்தானிய அரசு எவ்வித கருத்துகளும் தெரிவிக்காமல் இருப்பதும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குறித்த விமர்சனங்களைத் தவிர்த்து வருவதும் கண்டணத்துக்குரியது என்று பிரித்தானியாவின் தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெர்மி கோர்பின் தெரிவித்தார். அமெரிக்காவில் நடக்கும் போராட்டங்களையடுத்து ட்ரம்ப் பன்னாட்டு அளவில் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார். இந்த நிலையிலேயே பிரித்தானியாவில் தொழிலாளர் கட்சியின் தலைவராக இருந்தவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஜெர்மி கோர்பின் ட்ரம்ப்பை விமர்சிக்காத பிரித்தானிய அரசை இவ்வாறு விமர்சித்துள்ளார்.



இராணுவத்தைக் களத்தில் இறக்குவேன் என்று ட்ரம்ப் மிரட்டல் விடுத்ததையடுத்து அமெரிக்காவில் போராட்டங்கள் அதிகரித்துள்ளன. இதனால் அமெரிக்காவின் வொஷிங்டனிலும் போராட்டக்காரர்களின் எதிர்ப்புகள் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் லிங்கன் நினைவிடத்தின் படிகளில் இராணுவப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# “அப்பாவால் சுவாசிக்க முடியவில்லை”

## மகளின் கேள்விக்குத் தாய் பதில்



அமெரிக்காவில் பொலிஸாரால் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரான ஜோர்ச் பிளாய்ட்டின் மனைவியைப் பன்னாட்டு ஊடகங்கள் அணுகியபோது, 'எங்களுக்கு நீதி வேண்டும்' என்று கண்ணீர் மல்கத் தெரிவித்தார் அவர். தன்னுடைய 6 வயது மகளுடன் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவர் ஒரு நல்ல மனிதர். எங்களுக்கு நீதி வேண்டும். மகள் பிறந்ததில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். குழந்தையை அவர் அவ்வளவு நேசித்தார். அவள் அழுதாள் உடனே எழுந்துவிடுவார். மிகவும் நேசித்தார். வேலைக்காகவே அவர் எங்களைவிட்டுத் தூரம் சென்றார். தூரத்திலிருந்தே குடும்பத்தைக் கவனித்து வருவதாகக் கூறினார். சம்பவத்தின்போது பொலிஸ் அதிகாரிகள் நான்கு பேர் இருந்தனர். அதில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் ஏன் குற்றம் சாட்டப்படவில்லை, தொடர்ந்து நீதிக்காகப் போராடுவேன், எங்களுக்கு நீதி தேவை தொலைக்காட்சியில் ஏன் அப்பாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்? என்று கேட்டு அப்பா எப்படி இறந்தார் என்பதை அறிய விரும்பினாள் மகள். நான் அவளிடம் சொன்ன ஒரே விடயம், அப்பாவால் சுவாசிக்க முடியவில்லை என்பது மட்டுமே என்று கூறினார்.

# சீனா அத்துமீறவில்லை என்பது உறுதியானதா?



## ராகுல் காந்தி கேள்வி

இந்தியா – சீனா எல்லைப் பகுதிகளில் பதற்றம் நிலவுவதாகச் செய்திகள் வெளிவரும் நிலையில், சீன இராணுவத்தினர் இந்தியப் பகுதிக்குள் நுழைந்தார்களா இல்லையா என்ற விவரங்களை மத்திய அரசு வெளியிட வேண்டும், அதாவது இந்தியப் பகுதிக்குள் அவர்கள் நுழையவில்லை என்பதை மத்திய அரசு உறுதி செய்ய முடியுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ராகுல் காந்தி. குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் சீனத் துருப்புகள் கிழக்கு லடாக் பகுதிக்கு நகர்ந்துள்ளதாகவும் இந்தியா தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்திருந்தார். இதனையடுத்து காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி, தனது கீச்சகப் பக்கத்தில் இந்தியப் பகுதிக்குள் எந்த ஒரு சீன இராணுவச் சிப்பாயும் நுழையவில்லை என்பதை மத்திய அரசு உறுதி செய்ய முடியுமா?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், ஜூன் மாதம் 6ஆம் திகதி கிழக்கு லடாக் பகுதிப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவும் சீனாவும் உயர்மட்ட இராணுவச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்துள்ளதான அறிக்கை ஒன்றையும் ராகுல் காந்தி பகிர்ந்துள்ளார். இந்தியா – சீனா எல்லை குறித்த இந்திய அரசின் மௌனம் தேவையற்ற யூகங்களுக்கே வழிவகுக்கிறது என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

# இந்தோனேசிய ஜனாதிபதியை மன்னிப்பு கேட்குமாறு உத்தரவு



கடந்த ஆண்டு பப்புவா பிராந்தியத்தில் உள்நாட்டு அமைதியின்மையைக் கட்டுப்படுத்த இணைய வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்த முடிவு சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்தது இந்தோனேசிய நீதிமன்றம்.

இதற்காக இந்தோனேசியா அதிபர் ஜோகோ விடோடோ மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் பணித்தது. ஜாவா தீவில் உள்ள சுரபயா நகரில் பப்புவான் மாணவர்கள் இனவெறி வன்முறையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து கடந்த ஓகஸ்ட் மாதம் பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. பப்புவா மற்றும் மேற்கு பப்புவா மாகாணங்களில் அமைதியின்மை பரவியதால், அது பரவாமல் தடுக்க இணைய அணுகலைத் துண்டிப்பதாகக் கூறியது அரசு.

இந்தச் செயலுக்காக ஒரு மாதத்திற்குள் மன்னிப்பை மூன்று தேசிய செய்தித்தாள்களில் வெளியிட்டு ஆறு தொலைக்காட்சி நிலையங்களில் ஒளிபரப்ப வேண்டும் என்று நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கை இந்தோனேசியாவின் சுதந்திர பத்திரிகையாளர்கள் கூட்டணி மற்றும் சட்டத்தரணிகள் குழு தென்கிழக்கு ஆசியா சுதந்திர வெளிப்பாட்டு வலையமைப்பு ஆகியவை தாக்கல் செய்தன.

இந்த இணையத் தூண்டிப்புச் செயல் உள்நாட்டு அமைதியின்மை நேரத்தில், மனித உரிமை மீறல் மற்றும் ஊடக சுதந்திரத்தை மீறும் செயல் என்று வாதிடப்பட்டது.

# ஐரோப்பிய எல்லைகள் திறக்கப்படும்!

## பிரான்ஸுக்குத் தொடர்ந்து தடை

ஜூன் மாதம் 15ஆம் திகதி முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் எல்லைகள் அனைத்தும் திறக்கப்படும் என்றும் பிரான்ஸ் நாட்டு மக்களுக்கு 180 நாடுகள் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் பிரான்ஸின் வெளிவிகாரங்கள் மற்றும் சுற்றுலாத் துறைக்கான அரசாங்கச் செயலர் ஜீன் பப்ரிஸ்ற் லிமொய்ன் தெரிவித்தார்.

பிரான்சில் கொரோனா வைரஸ் காரணமாக 1 இலட்சத்து 89ஆயிரத்து 220 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 28ஆயிரத்து 940 பேர் சாவடைந்துள்ளனர். இதனால் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனான எல்லைகளைப் பிரான்ஸ் அரசு மூடியது. இந்த நிலையில், ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் ஜூன் மாதம் 15ஆம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை நடுப்பகுதிக்குப் பின்னர் இந்த எல்லைகள் விரிவடையும் என நம்புவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிகளவு கொரோனத் தொற்றினால் உலகத்தின் 90 நாடுகள் பிரான்ஸைத் தடைசெய்திருப்பது சுட்டிக்காட்டத்தக்கது.



# தியனன்மென் படுகொலைகளுக்கு சீனா மன்னிப்புக் கேட்கவேண்டும்

## தாய்வான் அறிவிப்பு; முட்டாள் தனம் என்கிறது பீஜிங்



சீனாவின் பீஜிங்கில் ஜனநாயகச் சார்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது 1989ஆம் ஆண்டு தியனன்மென் சதுக்கத்தில் நடந்த ஒடுக்குமுறைக்கு மன்னிப்புக் கேட்குமாறு தாய்வான் சீனாவிடம் கோரிக்கையை முன்வைத்தது.

இதைச் சீனாவின் அயலுறவு அமைச்சகம் 'முட்டாள்தனம்' என்று கூறி நிராகரித்தது. தியனன்மென் படுகொலைகள் நடந்து 31ஆண்டுகள் நிறைவடைகின்றன. சீன அதிகாரிகள் இந்த நிகழ்வை பகிரங்கமாக நினைவுகூருவதைத் தடை செய்கிறார்கள்.

சீனா அரசு படுகொலை செய்யப்பட்ட எண்ணிக்கையை வெளியிடவில்லை, இந்த நிலையில் தாய்வான் – சீனாப் பிரச்சினை வலுப்பெற்றுவருகிறது.

சீனா தாய்வானைத் தனது சொந்த பிரதேசமாகக் கூறுகிறது, தேவைப்பட்டால் இராணுவ பலத்தால் அது திரும்பப் பெறப்படும் என்றும் எச்சரிக்கிறது. இந்த நிலையிலேயே தியனன்மென் ஒடுக்குமுறைக்காகச் சீனா மன்னிப்புக்கோர வேண்டும் என்று தாய்வான்கூறியுள்ளது.

# கொரோனா சிகிச்சைக்கு கட்டணம் கோரிய வழக்கைத் தள்ளுபடி செய்தது நீதிமன்றம்

கொரோனா சிகிச்சைக்குக் கட்டணத்தை நிர்ணயிக்கக் கோரியும், தனியார் மருத்துவமனைகளில் 50சதவீத படுக்கைகளை ஒதுக்குமாறு கோரியும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜவாஹிருல்லா தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

ஜவாஹிருல்லா தொடர்ந்த வழக்கில் கொரோனாவால் அதிக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அரச மருத்துவமனைகளால் மட்டும் நிலைமையை சரி செய்துவிட முடியாது என்பதால் தனியார் மருத்துவமனைகளில் பங்களிப்பு அவசியமானது. வர்த்தக சுரண்டலை தடுக்க, கட்டண விகிதம் உள்ளிட்ட ஒழுங்குமுறைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

தனியார் மருத்துவமனைகளை சிகிச்சை அளிக்க அனுமதித்த அரசு, கட்டணம் நிர்ணயிக்க தவறிவிட்டதால், தனியார் மருத்துவமனைகள் அதிக கட்டணம் அறவிடுகின்றன. தனியார் மருத்துவமனைகளில் 50 சதவீத படுக்கைகளை கரோனா சிகிச்சைக்கு ஒதுக்கும்படி மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்த உத்தரவிட வேண்டும். கரோனா சிகிச்சைக்கு கட்டணம் நிர்ணயிக்க வேண்டும்'. என்று கோரிக்கை வைத்திருந்தார்.

ஜவாஹிருல்லாவின் இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தபோது, உச்ச நீதிமன்றத்திலும் இதுபோன்ற வழக்கு தொடரப்பட்டு உள்ளதாகவும், தனியார் மருத்துவமனைகளை எதிர்மனுதாரர்களாக சேர்க்கவில்லை என்பதையும், குறிப்பிட்டு எந்த அரசாணையை எதிர்த்தும் வழக்கு தொடரப்படவில்லை என்பதையும் நீதிபதிகள் சுட்டிக்காட்டி வழக்கைத்தள்ளுபடி செய்தனர்.

# அமெரிக்கா சிறைப்பிடித்த ஈரான் பேராசிரியர் விடுவிப்பு

வர்த்தக இரகசியங்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்காவால் சிறைப்பிடிக்கப்பட்ட ஈரானைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் இன்று விடுவிக்கப்பட்டதாக ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈரான் பேராசிரியர் கலாநிதி சிரஸ் அஸ்காரி என்பவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டார். 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிறையில் அடைக்கப்பட்ட இவர் 2019ஆம் ஆண்டு நவம்பரில் விடுவிக்கப்பட்டார் எனவும் கொரோனா காரணமாக அவர் தற்போதே ஈரானுக்குச் செல்ல முடிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானிய அரச ஊடகங்கள் வெளியிட்ட ஒளிப்படங்கள் பேராசிரியர் ஈரானுக்குச் சென்றிருப்பதை உறுதிப்படுத்தின. ஈரானைச் சேர்ந்த பலர் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை மீறியதற்காக அமெரிக்கச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மணமகன் தேவை

இந்து வேளாளர், 1992 இல் பிறந்த, கல்வியியல் கல்லூரிப் பயிற்சி பெற்ற, உத்தரட்டாதி 1 ஆம் பாத நட்சத்திரமுடைய தங்கள் மகளுக்கு 1986 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த அரச அல்லது வங்கிச் சேவையில் உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புக்கு - 077 986 1127

# அமெரிக்க நிகழ்வுகளிலிருந்து இலங்கை பாடம் கற்றுக்கொள்ளுமா?



சுரேந்திரன் குருசாமி

அமெரிக்க நிகழ்வுகளில் இருந்து இலங்கை அரசு பாடம் கற்காவிடில் எதிர்காலம் மிக மோசமடையலாம்.

உலகின் அமைதியையும் நல்லிணக்கத்தையும் சீர்குலைக்கும் இனவாதமும் நிறவெறியும் இந்த நவீன யுகத்திலும் தொடர்வது இந்த பூகோளத்தின் சாபக்கேடேயாகும்.

அதன் விளைவுகளை தற்போது உலக வல்லரசான அமெரிக்கா அனுபவித்து வருகின்றது. இது ஏனைய உலக நாடுகளுக்குச் சிறந்த பாடமாக அமைந்துள்ளது.

-அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஃப்ளாய்ட், பொலிஸாரால் கழுத்து நெரித் துக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கா முழுவதும் போராட்டங்கள் எட்டாவது நாளாக தொடர்கின்றன.

இதனால் அமெரிக்காவில் நாற்பது நகரங்கள் முடங்கியுள்ளதுடன் பல கோடி பெறுமதியான சொத்துக்களும் நாசமாகியுள்ளன.

நிற பேதத்தின் அடிப்படையில் மோதிக்கொண்ட அமெரிக்கர்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு பல முயற்சிகளை முன்னெடுத்ததுடன், பல பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்காவிற்கு குடியேற்றப்பட்ட கறுப்பினத்தவர்களுக்குச் சகல அரசியல் உரிமைகளும் சட்ட ரீதியாக வழங்கப்பட்டு கறுப்பினத்தைச் சார்ந்த பராக் ஒபாமா ஜனாதிபதியாக அமெரிக்காவை இரண்டு தவணைக் காலம் ஆட்சி செய்தும் இன்று வரை நிறவெறி தொடர்வதும், அதன் காரணமாக இந்தக் கொரோனா அபாய காலத்திலும் மக்கள் போராட்டங்கள் வெடித்து அது உச்சப் பாதுகாப்புடன் இருக்கும் வெள்ளை மாளிகையை மக்கள் முற்றுகையிடும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளமை, இலங்கை போன்ற நாடுகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்க தூண்டியுள்ளது.

இதன் மூலம் அரசியல் காரணங்களுக்காக அமெரிக்காவில் விதைக்கப்பட்ட நிறவெறி பல தசாப் தங்கள் கடந்தும் அறுவடை செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றமை வெளிப்பட்டுள்ளது.

இந்த நிலையை பார்க்கும்போது இலங்கை அமெரிக்காவைவிட பல மடங்கு ஆபத்தை நோக்கி செல்லப்போகிறது என்ற அச்சம் எழுந்துள்ளது.

அபிவிருத்தி மூலம் இனப் பிரச்சினைகளை தீர்க்கலாம் அல்லது மழுங்கடிக்கலாம் என்ற இலங்கை அரச தலைவர்களின் கோட்பாடு பொய்யானது என்பதை நிரூபித்துள்ளது அமெரிக்கப் பிரச்சினை.

அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களுக்கு உரிமை தேவை இல்லை, தலைவர்களுக்கே தேவை என்ற தொனிப்பட கூறிவரும் கருத்துக்கள் எவ்வளவு தவறானவை என்பதை அமெரிக்க நிகழ்வுகள் நிரூபித்துள்ளன.

தற்போது அமெரிக்காவில் இடம்பெறும் சம்ப வங்கள் தொடர்பில் கருத்துக்களை கூறமுடியாத திரிசங்கு நிலையில் இலங்கை உள்ளமை எமது நாட்டின் ஜனநாயகத் தோல்வியேயாகும்.

இங்கு பூர்வீகக் குடிகளான தமிழ் தேசிய இன மக்களையே இன ரீதியாக வஞ்சிக்கும் அரசு அமெரிக்காவில் நிற ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் பற்றிப் பேசுவதற்கு என்ன தார்மீகம் உள்ளது? என்ற கேள்வி முன்நிற்கின்றது.



சில குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் தேர்தல் வெற்றிக்காகவும் இலங்கையில் மிக தாராளமாக இனவாதம் விதைக்கப்பட்டு வருகின்றது.

அதிலும் குறிப்பாக தற்போதைய ஆட்சியாளர்கள் அளவுக்கதிகமாக இனவாதத்தையும் மதவாதத்தையும் வளர்ப்பதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

இவர்களின் செயற்பாடுகளாலும் போதனைகளாலும் இனவாதம் அடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறன நிலை தொடர்வதனால் இன்று இனவாதத்தைப் பரப்பும் அரசியல்வாதிகளே நினைத்தாலும் மக்களை இனவாதத்திலிருந்து மீட்டு இன நல்லிணக்கத்தை நோக்கிக் கொண்டுசெல்ல முடியாது.

இந்தப் போக்கு இலங்கையின் வளர்ச்சியையும் அமைதியையும் தொடர்ந்து பாதிக்கும்.

இலங்கையை பொறுத்தவரைக்கும் இனவாதம் தற்போது தலைவரைக்கும் வெள்ளம் வந்த நிலையில் உள்ளது. தலைக்குமேல் வெள்ளம் வருவதற்கு முன் தடுத்தால் சில வேளை மீள வாய்ப்பிருக்கலாம். தவறின் இந்த நாடு இனவாத தீயினால் எரிந்து நாசமாகவேண்டும் என்பதே விதியாக இருக்கும் .

ஒரு நாட்டில் அந்த நாட்டினது பூர்வீகக் குடிகளான தேசிய இனத்தினை அந்த நாட்டினது இராணுவத்தைக் கொண்டு தாக்கி அழித்துவிட்டு, அந்த நாளில் ஒருபுறத்தில் மக்கள் கொல்லப்பட்ட உறவுகளை நினைத்து அஞ்சலிக்கத் தடைவிதித்துக்கொண்டு, மறுபுறம் கொரோனா வைரஸ் தாக்கத்தின் அடிப்படையில் அதி அபாய வலயமா கக் காணப்படும் தலைநகரில் சொந்த மக்களை அழித்ததை வெற்றி விழாவாகக் கொண்டா டும் மனநிலையில் உள்ள ஆட்சி யாளர்கள் இருக்கும் வரையில், சாதாரண பெரும்பான்மையின மக்களின் மனங்களிலும் இன வாதம் தூண்டப்படுவதை யாரா லும் தடுக்கமுடியாது.

முக்கிய விடயங்களை இங்கு கருத்தில்கொள்ளுவது அவசியம்.

அமெரிக்க கறுப்பினத்தினர் குடியேற்றப்பட்ட வர்கள். ஆனால் தமிழினம் இலங்கையின் பூர்வ குடியினர், தேசிய இனம். தம்மைத்தாமே ஆழ்வதற்கான சகல தகுதிகளும் உரித்தும் உடையவர்.

அங்கு கறுப்பினத்தவருக்கு சகல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு இன, மொழி மற்றும் மத ரீதியாக அரசியல் யாப்பிலேயே ஒரு பூர்வ குடித் தேசிய இனம் புறந்தள்ளப் பட்டுள்ளது.

இன அங்கீகாரத்திற்கான கோரிக்கைகள் மறுக்கப்பட்டு நசுக் கப் பட்டுள்ளன.

சுயநிர்ணய உரிமைகோரிக்கை பிரிவினை வாதமாக சித்தரிக்கப் படுகிறது.

நாட்டுமக்களே விரும்பினாலும் ஒரு தமிழர் நாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட முடியாத வகையில் அமைந்துள்ளது கடுமையான இனவா தப் போக்கு.

அதற்கும் மேலாக, அமெரிக்காவில் குற்றமிழைத்த காவல் துறையினர் தண்டிக்கப்பட்டுள்ளனர். நீதி தன் கடமையைச் செய்துள்ளது. காவல் துறை மண்டியிட்டு மன்னிப்புக் கோரியுள்ளது.

இலங்கையில் நிலமை என்ன?

தமிழினத்திற்கு எதிரான குற்றம் புரிந்தோர், நீதியின் முன் நிறுத்தப் பட்டார்களா? இல்லை, மாறாக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு கவுரவிக்கப் படுகிறார்கள்.

தண்டிக்கப் பட்டோரும் விடுவிக்கப் படுகிறார்கள், தேசிய வீரர்களாக கொண்டாடப் படுகிறார்கள். இந்த துரதிஷ்ட நிலைக்கு ஆட்சியாளர்கள் நாட்டை கொண்டு சென்றுள்ளார்கள். அநீதிக்கு எதிரான விசாரணை மறுக்கப் படுகிறது.

அமெரிக்காவில் வெள்ளை இனத்தவரும், தமது சகோதர இனத்தின் போராட்டத்தை ஆதரித்து கரம் கோத்திருக்கிறார்கள்.

இங்கு தமிழ் மக்களின் தேசிய அடிப்படை உரிமைப் போராட்டத்திலோ, அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளுக்கு எதிராகவோ, அல்லது அவர்களது இனப்படுகொலை, மனித உரிமை மீறல், யுத்தக் குற்றம் மீதான விசாரணைகள் என்பவற்றிற்கு ஆதரவாகவோ சகோதர இனமான சிங்கள மக்கள் எவ்வளவு தூரம் இன பேதத்தினை கடந்து கைகோர்த்து நிற்பார்கள், அல்லது நிற்பவர்களை அந்த இனம் எந்த அளவு ஏற்று கொள்கிறது என்பது இன்னும் கேள்விக் குறியே.

இந்த போக்கினால் பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாடுகளின் எதிர்காலம் பொதுவாகச் சிந்திக்கும் மிதவாதத் தலைவர்களின் கைகளுக்குச் செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும், இன்று விதைக்கப்படும் இனவாத விதைகள் விருட்சமாகி அவர்களை சவாலுக்கு உட்படுத்தும்.

தொடர்ச்சியாக பெரும்பான்மையினர் இனவாதத்தை முன்நிறுத்தி தேசிய இனமான தமிழினத்தை ஒடுக்க முற்படும்போது, மக்களை ஒன்றிணைத்து பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் முயல்வதை அரச தலைவர்கள் இனவாதமாக சித்தரித்து நாடு முழுவதும் இனவாத கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன.

(08 ஆம் பக்கம் பார்க்க)



# எமது வேண்டுகோளுக்கேற்ப பிற்போடப்பட்டுள்ளது தேர்தல்

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 04

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆலோசனைக்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முடிவெடுத்திருந்தால் நாம் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமை மற்றும் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேல்தலை நடத்துவதாக தேர்தல்கள் 'ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்பதனாலே நாங்கள் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தோம்.

தேர்தல்கள் ஆணைக்குழு முன்வைத்த யோசனைக்கமைய ஜனாதிபதி தீர்மானம் எடுத்திருந்தால், இன்று உயர் நீதிமன்றத்தின் முன்னால் நிற்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

தற்போது எமது வேண்டுக்கோளுக்கேற்ற வகையில் இம்மாதம் 20ஆம் திகதி நடத்தப்பட இருந்த பொதுத்தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் நெருக்கடி கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னரே தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பாதுகாப்பான சூழ்நிலையில் தேர்தலை நடத்துவதற்காக நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம். பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தயாராகவே இருக்கின்றது - என்றார்.

## அமெரிக்க நிகழ்வுகளிலிருந்து .....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது இந்த நாட்டை படு பாதாளத்திற்கு இட்டுச்செல்லும் என்பதற்கு தற்கால அமெரிக்க சம்பவம் நல்ல உதாரணமாக அமைந்துள்ளது.

ஏற்கனவே இன முறுகலால் முப்பது வருடகால யுத்தம் இந்த நாட்டை சின்னாபின்னமாக்கி நாட்டின் வளர்ச்சியை முப்பது வருடங்கள் பின்நோக்கி கொண்டு சென்றுள்ளது. இதை உணராமல் இந்த யுத்தத்தில் பாடங்கற்றுக்கொண்டு, யுத்தத்திற்கு அடிகோலிட்ட காரணிகளை அறிந்தும் சரிசெய்யாமல், அவற்றை பொருட்படுத்தாமல் பயணிக்கும் இலங்கை அரசு அமெரிக்காவிடமிருந்தேனும் பாடம் கற்றுக்கொள்ளுமா? அல்லது இதையும் கடந்து மீளா இன வேற்றுமைத் துயரப் பாதையில் நடைபோடுமா?

(கட்டுரையாளர், பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்)

## அங்குனுகொலபெலஸ்ஸ சிறைக்குள்

# நூதனமாக போன் கடத்த முயன்ற கைதி சிக்கினார்

கொழும்பு, ஜூன் 04

நூதன முறையில் மறைத்து மூன்று கைத்தொலைபேசிகளை அங்குனு கொல பெலஸ்ஸ சிறைச்சாலைக்குள் கொண்டு செல்ல முயற்சித்த கைதியைக் கண்டு பிடித் துள்ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

உடலில் வித்தன்மை ஏற்பட்ட காரணத்தினால், தங்காலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிறைக்கு மீண்டும் அழைத்து வரப்பட்ட கைதியே இவ்வாறு கைத்தொலைபேசிகளை ஆசன வாயிலில் வைத்து மறைத்து எடுத்துச் செல்ல முயற்சித்துள்ளார்.

கைதி சிறைக்குள் செல்லும்போது மேற் கொள்ளப்பட்ட சோதனையில் அவரது உடலில் செல்போன்களை மறைத்து வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

தங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த இந்த கைதி குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிரடிப் படையினர் கூறியுள்ளனர்.

# ஒன்றரை லட்சம் மக்களுக்காக 120 பொலிஸார் மட்டுமே கடமை

## தமது நிலமையை விளக்குகிறார் சம்மாந்துறை பொலிஸ் அதிகாரி

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குள் வசிக் கும் ஒன்றரை லட்சம் மக்களுக்கும் சேவை யாற்ற 120 பொலிஸார் மட்டுமே உள்ளனர், எனவே குற்றங்களைத் தடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் சம்பாந்துறைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி வை. விஜயராஜா.

அண்மைக் காலமாக காரைதீவுப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் திருட்டுக்கள் தொடர்பாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் நேற்று மாலை காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச பொது நூலகக் கேட் போர் கூடத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் கடற்படை அதிகாரி காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான மு. காண்டீபன் த. மோகனதாஸ் ஆ. பூபாலரெத்தினம் மற்றும் ஆலயத் தலைவர்கள், அதிபர்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றிய பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:

களவுகளைக் கட்டுப்படுத்துவதில் பொலி ஸாருக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை எவ்வாறு பெறலாமென் பதையிட்டு இதன் போது கலந்துரையாடப்பட்டது.

எம்மிடமிருக்கின்ற 120 பொலிஸாரி பல்வேறு ஒதுக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுகின்றவர்களை தவிர்த்தால் 30 பேர் மட்டுமே பொது மக்கள் பிரச்சினைகளைக் கவனிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். 2 ஜீப்கள் மட்டுமே உள்ளன. இவை போதாது.

சம்மாந்துறைப்பொலிஸ் பிரிவில் சம்மாந்துறை நிந்தவூரை விட காரைதீவில் அண்மைக்காலமாக கொள்ளை திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துவருவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

இவைகளில் 50வீதமான களவுகள் இன் னும் பிடிபடவில்லை. எனவே பொதுமக்கள் ஒத்துழைத்தால் மட்டுமே களவுகளைத் தவிர்க்கலாம்.

பொதுவாக களவுபோவதற்கு பொது மக்களது கவலையீனம். கதவுகளையன்னல்களை திறந்துவிட்டு தூங்குவது பூட்டினாலும் சாவிக்கொத்தை பகிரங்கமாக தொங்கவிடுவது அலுமாரிகளில் நகைகளை பணத்தை பாதுகாப்பின்றி வைப்பது அதுமட்டுமல்ல குறித்த அலுமாரியை பூட்டினாலும் திறப்பை அங்கேயே தொங்கவிடுவது. பாதுகாப்பு கமராக்களை முறையான விதத்தில் பொருத்தாமை இப்படி பல காரணங்களால் களவு இலகுவாகிப்போகின்றது.

இனிமேல் இரவு 10மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரை வீதிகளில் திரிந்தால் கைதுசெய்யவேண்டிவரும். அடையாள அட்டை முதலான ஆவணங்களை கையில்வைத்திருத்தல் அவசியமாகின்றது - என்றார்.






# தமிழகத்திலுள் ஈழ அகதிகளுக்கு விடுதலைச் சிறுத்தைகள் உதவி







தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கு நாம் தமிழர் கட்சியினர் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

இலங்கையிலிருந்து போர் காரணமாகத் தமிழ் நாட்டுக்கு இடம்பெயர்ந்தவர்களில் கணிசமானவர்கள் போர் முடிந்த பின்னர் இலங்கைக்குத் திரும்பிவிட்டனர். ஆனாலும் இலங்கைக்குத் திரும்ப முடியாத சூழ்நிலையில் பல ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் பல்வேறு இடங்களிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கே உலர்உணவுப் பொதிகளை வழங்கப் பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி ஒன்றியத்திலுள்ள வாணியாறு ஈழத்தமிழர் முகாம் மக்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னிஅரசு தலைமையிலான குழுவினர் நேற்று நேரில் சென்று நிலைமையினைப் பார்வையிட்டு உலர்உணவுப் பொருட்களை வழங்கிவைத்துள்ளனர்.

முகாம்களில் வாழுகின்ற ஈழத்தமிழ் உறவுகள் கொரோனா காரணமாக தொழில் வாய்ப்பை இழந்ததால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைக் கருத்திற்கொண்டே கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன் அவர்களின் அறிவுரைக்கமைவாக தமிழகத்தில் ஈழத்தமிழர்கள் வாழுகின்ற அனைத்து முகாம்களுக்கும் நிவாரணப் பொதிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஈழத்தமிழர்கள் மீது விடுதலைச் சிறுத்தைகள் கொண்டிருக்கும் உறவு என்றுமே மாறாது. இலங்கையில் தமிழ் மக்கள் அரசியல் ரீதியான விடுதலையைப் பெற்று வாழுகின்ற நிலை ஏற்படும்போதே முகாம்களில் தங்கிவாழுகின்ற ஈழத் தமிழர்கள் அவர்கள் சுயவிருப்பின் அடிப்படையில் தாயகத்திற்குச் செல்ல முடியும். அதுவரையில் உங்களை எவரும் வற்புறுத்தி இலங்கைக்குத் திருப்பி அனுப்பமுடியாது என்று அங்கு உரையாற்றிய வன்னி அரசு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை நிலையச் செயலாளர் தமிழ்ச்செல்வன், அமைப்புச் செயலாளர் கி.கோவேந்தன், மாவட்டச் செயலாளர் ஜானகிராமன், மின்னல் சக்தி அதியமான் உள்ளிட்ட விடுதலைச் சிறுத்தைகள் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு நிவாரணப் பொதிகளை வழங்கிவைத்தனர்.

# ஆஸியிலிருந்து 2,500 பசுக்களை இறக்குமதி செய்வது மோசடி வேலை

## சீறுகின்றார் அத்துரலியே ரத்தன தேரர்



கொழும்பு,ஜூன் 04

இரண்டாயிரத்து ஐந்நூறு பசு மாடுகளை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு ,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த ஊடக சந்திப்பில் பேசியபோது அவர் இந்த எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றார்.

முழுமையாக மோசடி செய்யும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை செய்யவுள்ளதாக சாடிய அவர், ஆஸ்திரேலியாவிலிருந்து பசுக்களை இறக்குமதி செய்தால் அதில் அதிகமானவை இலங்கையின் காலநிலை மற்றும் பல விடயங்களினால் இறந்து போய்விடும் என்றும் அவர் எச்சரித்தார்.

# வாளுடன் இளைஞர் வீமன்காமத்தில் கைது

வடமராட்சி, ஆனி 3

வீமன்காம ம், குடியிருப்பில் வீடொன்றில் இருந்து நேற்று பகல் 11 மணியளவில் இளைஞர் ஒருவர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் உரப் பையில் சுற்றி வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

28 வயதான சிவலிங்கம் சிந்துராஜ் என்கிற சந்தேகநபரே கைது செய்யப்பட்டவர் என்று தெரிவிக்கப் பட்டது.

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேலன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# நாளை உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாட மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நடவடிக்கை

2020 ஜூன் மாதம் 05 ஆம் திகதிய உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடு முகமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

'உயிர்ப்பல்வகைமை– இயற்கைக் கொரு வாய்ப்பு' எனும் தொனிப்பொருளின் ஊடாக சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சினால் இத்தடவை உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையானதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குகின்றது.

இதற்கிணங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மரநடுகைக் கருத்திட்டங்கள், நாடளாவிய பாடலாக்க மற்றும் புகைப்படப் போட்டி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கொறோனா தொற்று நோய்க் காலப்பகுதிக்குள் கொழும்பு நகரத்தின் சுற்றாடல் இயல்பினை வெளிக்காட்டுகின்ற ஒளிநாடாவொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

உலக சுற்றாடல் தினத்தின் நிமித்தம் சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சு தனதுஅமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுடன் கூட்டாக இலங்கையில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கத் தக்கதாக மரநடுகைக்கருத்திட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளதோடு இதன் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்துவமான பழமரக் கன்றுகள் பிரதேசத்தின் மதவழிபாட்டு நிலையங்களில் நடுகை செய்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கேகாலை, மாத்தறை மற்றும் பதுளை ஆகிய மூன்று மாவட்டங்களினதும் மரநடுகைக் கருத்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கிணங்க இந்த மாவட்டங்களில் பௌத்த, இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய மதவழிபாட்டு நிலையங்களில் உலக சுற்றாடல் தினத்தன்று இந்த பழமரக் கன்றுகளை நடுகைசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'இலங்கையின் விசித்திரமான உயிர்ப் பல்வகைமை' எனும் தொனிப்பொருளின் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடளாவிய பாடலாக்க மற்றும் புகைப்படப் போட்டிக்காக தீவின் பல்வேறு திசைகளிலிருந்தும் பாடலாக்கங்களும் பெருந்தொகையான புகைப்படங்களும் கிடைத்துள்ளன. இன்றளவில் சம்பந்தப்பட்ட சிறந்த ஆக்கங்களை தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டில் நிலவுகின்ற நடப்பு நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்த போட்டியை முழுமையான இணையவழி முறையூடாக நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதிப் போட்டி முடிவுகள் வெகுசன ஊடகங்கள் மூலமாகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணையத்தளம் ஊடாகவும் வெளியிடப்பட உள்ளன.

கொறோனா தொற்றுக் காலத்திற்குள் கொழும்பு நகரத்தின் சுற்றாடல் தன்மைகள் பற்றி மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 10 நிமிட ஒளிநாடாவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு உலக சுற்றாடல் தினத்தன்று உலக சுற்றாடல் தின பிரதான நிகழ்ச்சி நடாத்தப்படுகின்ற மிஹிந்தலை வழிபாட்டுத் தலத்தில் அந்த ஒளிநாடா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது. இத்தருணத்திற்கு காணி, காணி அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர்நாயகம் பி.பீ. ஹேமந்த ஜயசிங்க உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்க உள்ளனர்.

– இவ்வாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

## முடக்க காலத்தில் இணையக் குற்றங்கள் பெரும் அளவில் அதிகரிப்பு என அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

கொரோனாவினால் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியினுள் மாத்திரம் இலங்கையில் இணையக் (சைபர் கிரைம்) குற்றங்கள் பெருமளவில் –முன்னரை விடப் பல மடங்குகளில் – அதிகரித்திருக்கின்றன என இலங்கை கணினி அவசர தயார்நிலைகுழு (CERT) தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியினுள் 3,900 இற்கும் மேற்பட்ட இணையக் குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், இது மிகவும் பாரதூரமானதொரு நிலைமை என்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் ரவிந்து மீகாஸ்முல்லா தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு மற்றும் முடக்கம் காரணமாக பல நிறுவனங்கள் வீட்டிலிருந்து வேலை செய்வதற்காக அனுமதித்திருந்தமையால் பல அடையாள மாறாட்டம் (ஃபிஷிங்), தனியுரிமை மீறல்கள், மோசடிகள், சமூக ஊடகங்கள் தொடர்பான சம்பவங்கள் மற்றும் ஹக்கிங் தொடர்பான புகார்கள் இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவுக்குக் கிடைத்திருக்கிறது.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையை இணையக் குற்றவாளிகள் பயன்படுத்தியுள்ளனர். இதுவரைப் பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகளுக்கும் தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் இணைய குற்ற சம்பவங்கள் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்."

– என்றார் அவர்.

# மரண அறிவித்தல்

## திருமதி. பினாகபாணி நீலாம்பிகை (சக்கரை ரீச்சர்)

(முன்னாள் ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி)



வண்ணார்பண்ணை, 62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீலாம்பிக்கை பினாகபாணி நேற்று புதன்கிழமை (03.06.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம், நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பினாகபாணியின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வள்ளிநாயகி, வாலாம்பிகை, வைத்தீஸ்வரன், சர்வலோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராஜா, காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், தங்கராணி ஆகியோரின் மைத்துனியும், அரியகுமார் – பகீரதி, வசந்தமாலா – கணேசராஜா, வசந்தகுமாரி – காண்டீபன், முரளிதரன் – ஸ்ரீபவானி, ஸ்ரீதரன் – சேய்மணி, காலஞ்சென்றவர்களான அசோகமலர், அசோக்குமார் – லிங்கேஸ்வரி ரேணுகா, பாலராஜன் – பூங்கோதை, மஞ்சுளா – குகேந்திரன், கௌசல்யாதேவி–வருணா ஆகி யோரின் சிறிய தாயாரும், பகீரதி – அரியகுமார், ராஜ்குமார் – மஞ்சுளா, ராஜராஜன் – சங்கீதா ஆகியோரின் மாமியாரும், கார்த்திக் – விதுஷினி, காயத்திரி, கிரிஷாந் – நிஷானி, இந்துஜா –கிரிஷாந்த், றனுஷா, றோஜனா, தர்வின்குமார், பாரதிநேயன், சிவபைரவி, ராதா – ரொஜ் திக்கேரியஸ், ஆஷ்லி – பாலக், அபிராமி, மதுரா, லஷ்மி, தர்ஷன், கஜோஷன், சௌமியா, அக்ஷயா, ஆரோதனா, சுலக்ஷனா, ஹம்சனா ஆகியோரின் பேர்த்தியும், அலெக்சான்டர் ஆர்ஜனா, மானசா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (04.06.2020) மதியம் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0112716624,
0112361861

தகவல்:-
குடும்பத்தினர்

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'பரிசளிப்பு' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்


படம் 1



படம் 2


**படம் 1**
**இ. கார்த்திகன் - தரம் 8**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**படம் 2**
**டி. ஹரிஸ்மன் - தரம் 8**
**யா/ புனித பத்திரிசியார் கல்லூரி**

**படம் 3**
**எட்ரியன் லூக் ஜோன் - தரம் 8**
**ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை**

*இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு– 'நோயாளர் காவு வண்டி'*





படம் 3

காலைக்கதிர் Kalaikkathir
நோயாளர் காவு வண்டி
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி

**இன்று (04/06/2020) தலைப்பு**
**நோயாளர் காவு வண்டி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

த. கபிலாஷ் – தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

த. யதுனேஷ் – தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

எஸ். கெவின் பீட்டம் – தரம் 3
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

ராமதாசன் ஹர்ஷிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

மாதுரி மகிந்தன் – தரம் 8
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

ஆர். பிரிதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

க. சஜெந்தன் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

என் வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஆர். யதுஷன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. அக்சயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. அனன்யா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எல். ஜொன் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பி. ரொமிரெஷ் – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

விவேகானந்தன் லுகேசிகன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

# பேச்சாளர் பதவியிலிருந்து சுமந்திரனை விலக்கக் கோரினால் ரெலோவும் ஆதரவு

## முன்னின்று அழுத்தம் கொடுக்கும் என்கிறார் விந்தன்

கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியில் இருந்து சுமந்திரனை விலக்கும் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அந்தக் கோரிக் கையை நிறைவேற்றுமாறு ரெலோ முன்னின்று அழுத்தங்களை வழங்கும் என்று அக் கட்சியின் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நண் பகல் நடந்த செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் விடுதலைப் புலிகளை விமர்சித்தமை தொடர்பில் எமது கட்சிச் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் காட்டமான கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

இதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை தமிழரசு கட்சியின் அலுவலகத்திற்கு அவர் நேரடியாக சென்று தனது நிலைப்பாட்டை தெளிவாக தமிழரசு கட்சியினருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். கட்சித் தலைமைக் கூட்டத்திலும் தனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் போராட்டத்தையும், தலைவர் பிரபாகரனையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறி புலிகளை விமர்சித்த சுமந்திரன் அந்த நேர்காணலில் தான் 5 வயதில் இருந்து கொழும்பில் சிங்கள மக்கள் மத்தியில் வாழந்து வருகிறார் எனவும், சிங்கள மக்கள் மத்தியில் தான்வாழ்ந்தமைபெரும்பாக்கியம்எனவும்சொல்கின்றார்.

சுமந்திரன் அடிப்படையிலேயே போராட்டம், அதன் வலி, அதன் சுமை, தாக்கம், பெறுமதி பற்றி தெரியாதவர். ஆயு தப் போராட்டம் ஏன்? எதற்கு? யாரால் உரு வானது என்றும் அவருக்குத் தெரியாது.

எத்தனை போராளிகள் தமது இன் னுயிர்களை கொடுத்தார்கள் என்றும், எத்தனை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார் கள் என்றும், கோடான கோடி சொத்துக் கள் இழக்கப்பட்ட வரலாறும் அதன் இலட்சி யங்களும் தெரியாது. அதனால் அவற்றை யெல்லாம் சுமந்திரன் கொச்சைப்படுத்தியுள்ளார்.

சுமந்திரன் ஒரு சாதாரண மனிதன் என்றால் அவருடைய கருத்துக்களை சாதாரணமாக விட்டுவிடலாம், ஆனால் கூட்டமைப்பின் போச்சாளர் என்ற பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்து கொண்டு இவ்வாறான கருத்துக்களை வெளியிடு வது ஏற்றுக் கொள்ளமுடியாத, மன்னிக்க முடியாத கீழ்த்தரமான செயற்பாடாகும்.

இவ்வாறான செயற்பாட்டை முன்னெ டுத்த சுமந்திரனை இப்படியே விட்டுவிடு வதா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

சுமந்திரனை பதவி விலக்கும் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டால் அதனை நிறைவேற்ற எமது கட்சி முன்னின்று அழுத்தங்களைக் கொடுக்கும். நானும் ஒரு போராளி என்ற வகையில் வரலாறு தெரியாத சுமந்திரனை பதவி விலக அழுத் தங்களைக் கொடுப்பேன்.

முதலில் இலங்கை தமிழரசு கட்சி இந்த விடயம் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கின்றது என்பதை பொறுத்து எமது கட்சியின் நடவடிக்கை எவ்வாறானதாக இருக்கும் என்பதை தெரியப்படுத்துவோம் – என்றார்.

## முல்லையில் காணாமல் போன யுவதி சடலமாகக் கிணற்றில் இருந்து மீட்பு

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் காணாமல் போன யுவதி ஒருவர் அதே இடத்தில் உள்ள கிணறொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மாணிக்கபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்தே இந்தச் சடலம் நேற்று நண்பகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாணிக்கபுரம் என்ற இடத்தைச் சேர்ந்த 21 வயதான இராமலிங்கம் நிரோஜினி என்ற யுவதி கடந்த 31 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார் எனப் புதுக்குடியிருப்பு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதே இடத்திலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து அவர் சடலாமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## இ.தொ.காவின் புதிய தலைவர் இரு வாரங்களுக்குள் தீர்மானம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவர் அடுத்த இரண்டு வாரத்துக்குள் தெரிவுசெய்யப்படுவார் என அறிய முடிகிறது.

இ.தொ.காவின் தலைவராகவிருந்த ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவையடுத்து கட்சியில் தலைமை வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் சார்பில் ஆறுமுகன் தொண்டமானுக்குப் பதிலாக அவரது மகனான ஜீவன் தொண்டமானை வேட்பாளராகச் சேர்த்துக்கொள்ளும்படி பிரதமர் மகிந்தவிடம் கட்சி கேட்டிருக்கிறது.

ஆனால், கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பது தீர்மானிக்கப்படவில்லை.

கட்சியின் அன்றாடச் செயற்பாடுகளைக் கொண்டு செல்ல முத்துசிவலிங்கம், செந்தில் தொண்டமான், மருதபாண்டி ராமேஸ்வரன், மாரிமுத்து ஆகியோரை கொண்ட இடைக்கால நிர்வாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமைப் பதவி குறித்து உயர்மட்டக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எனினும் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படவில்லை.

எதிர்வரும் இரண்டுவாரக் காலப்பகுதிக்குள் கட்சியின் தலைவரை தெரிவுசெய்ய இ.தொ.காவின் உயர்மட்ட குழுவினர் ஆலோசித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.




## பேத்தாழை விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



மட்டக்களப்பு - பாசிக்குடா வீதி பேத்தாழையில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனக் கல்குடாப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிறைந்துறைச்சேனை வாழைச்சேனையைச் சேர்ந்த எம்.என்.முகம்மது நைரூஸ் (வயது 18) என்ற இளைஞரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞன் வாழைச்சேனை பிரதேசத்தில் இருந்து பாசிக்குடாவிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற போது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிரே சென்ற சிறிய ஹன்ரர் ரக வாகனம் சடுதியாக வீதியை விட்டு மறு பக்கம் செல்ல முற்படுகையில் பின்னால் சென்ற இவரது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானதாகக் கூறப்படுகின்றது. எனினும் ஹ்ன்ரர் வாகனத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

கல்குடா பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டமையுடன் சந்தேகத்தின் பேரில்ல் ஹன்ரர் சாரதியைக் கைது செய்துள்ளனர். ஹன்ரரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## அடுத்த ஆண்டுக்கான போயா விடுமுறைகள்

கொழும்பு, ஜூன் 04

அடுத்த ஆண்டு (2021) இலங்கையில் முழுநிலா (போயா) நாள் விடுமுறை தினங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நாள்களை இலங்கை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி மூலம் இதற்கான அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

அதன் படி, 2021ஆம் ஆண்டில் ஜனவரி 28, பெப்ரவரி 26, மார்ச் 28, ஏப்ரல் 26, மே 26, ஜூன் 24, ஜூலை 23, ஓகஸ்ட் 22, செம்ரெம்பர் 20, ஒக்ரோபர் 20, நவம்பர் 18 மற்றும் டிசெம்பர் 18 ஆகிய தினங்கள் முழுநிலா (போயா) நாள் விடுமுறை தினங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

# அர்ஜுன் மகேந்திரன் கைதை நல்லாட்சி அரசே நிறுத்தியது

## மனம் திறக்கிறார் மைத்திரிபால

**சர்வதேச பொலிஸ் ஊடாக அர்ஜுன் மகேந்திரனின் கைதினை, நல்லாட்சியில் உள்ளவர்களே தடுத்து நிறுத்தினார்கள் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

21ஆயிரம் கையொழுத்துக்களை நான் மூன்று நாள்களில் இட்டேன் என்ற கருத்தை, ஒரு சிலர் சமூக வலைத்தளங்களின் ஊடாக விமர்சித்து வருவதை நான் அவதானித்தேன்.

அந்த ஆவணங்கள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டவையாகும். அந்தத் திணைக்கள அதிகாரிகள்தான், 21 ஆயிரம் கையெழுத்துக்களைப் பதிவிடவேண்டும் எனக் கூறினார்கள். இதற்கான காலத்தை நான் உடனடியாக ஒதுக்கி, கையெழுத்துக்களை ஆவணங்களில் இட்டேன்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மர்ஜுன் மகேந்திரனை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை அரசின் ஊடாக சர்வதேச பொலிஸாருக்குக் கடிதங்களும் அனுப்பப்பட்டன.

இவ்வாறு நாம் சர்வதேச பொலிஸாருக்கு கடிதம் எழுதிய கால கட்டத்தில், எமது அரசின் சிலரே, இது நிதி மோசடியுடன் தொடர்புடைய பிரச்சினை அல்ல என்றும் அரசியல் பிரச்சினையென்றும் சர்வதேச பொலிஸாருக்கு மாற்றுக் கடிதங்களை அனுப்பியிருந்தார்கள்.

இதனை அடுத்து சர்வதேச பொலிஸார், மாற்றுக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமையால் இந்த விடயத்தில் முன்னிலையாக முடியாது என்று எமக்கு அறிவித்திருந்தார்கள்.

பின்னர், நாம் மீண்டும் பல்வேறு தரவுகளைச் சேகரித்து, பெரிய ஆவணமொன்றைச் சர்வதேச பொலிஸாருக்கு அனுப்பியிருந்தோம். இதன் பின்னர்தான், அவர்கள் இந்த விவகாரத்தை ஏற்றுக் கொண்டு சிவப்பு எச்சரிக்கையை விடுத்திருந்தார்கள்.



இந்த நிலையில், எனக்கு தற்போது கிடைத்துள்ள தகவலுக்கு அமைவாக அர்ஜுன் மகேந்திரன், சிங்கப்பூரில் இருப்பதோடு, அவரது பெயரையும் மாற்றிக் கொண்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இதனால், மீண்டும் ஆவணங்களைச் சிங்கப்பூர் அரசுக்கு அனுப்பும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சர்வதேச பொலிஸாருக்கு மாற்றுக் கடிதங்களை அனுப்பிய தரப்பினருக்கு, சிங்கப்பூரின் அதிகார வர்த்தினருடன் தொடர்பு உள்ளமை உறுதியாகியுள்ளது.

தனிப்பட்ட நட்பு ரீதியான உறவொன்று காணப்படுகிறது. இதனால்தான், இந்த விடயத்தில் இவ்வளவு தாமதம் காணப்படுகிறது. இது முற்றிலும் உண்மையான ஒரு செய்தியாகும் – என்றார்.

# இ.போ.ச பயணிகள் பேருந்து பொன்னாலை பாலத்தில் சவாரி

## அச்சத்தில் உறைந்தனர் பயணிகள்



யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ்ப்பாணம் காரைநகருக்கு இடையே பயணிகள் சேவையில் ஈடுபடும் இ.போ.ச காரைநகர் சாலைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை மீறி, விபத்தை ஏற்படுத்தும் வகையில் பயணம் செய்தமை தொடர்பாக பொது மக்கள் பலர் கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்று புதன்கிழமை (03) காலை யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து காரைநகருக்கு சேவையில் ஈடுபட்ட பேருந்து ஒன்று பொன்னாலை பாலத்தில், எதிரே வாகனங்களில் சென்ற பயணிகளை மோதித் தள்ளும் விதத்தில் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இதன்போது குறித்த வீதியால் வாகனங்களில் சென்ற பலர், விபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் உறைந்தனர். குறித்த சம்பவத்தை பார்த்துவிட்ட மனம் பொறுக்க முடியாத ஒருவர் குறித்த பேருந்தை புகைப்படம் எடுக்க முற்பட்டபோது அவரை பேருந்து நடத்துநர் ஏளனமாக ஏசிவிட்டு சென்றார் என அவர் கவலையுடன் கூறினார்.

இந்த விடயத்தை பார்த்த பலர் இது தொடர்பாக பொன்னாலை சந்தியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரிடம் விடயத்தை தெரிவித்தனர் எனவும் கடற்படை அதிகாரி இந்த விடயம் தொடர்பில் தான் கவனம் செலுத்துவதாக கூறினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் இ.போ.ச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பேருந்துகள் தமக்கிடையே போட்டியிட்டு வீதிகளில் சவாரி செய்வதால் வீதிகளால் பயணிக்கும் பொதுமக்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளமை தொடர்கதையாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருமணமாகி 9 நாள்களில் யுவதி நேற்றுப் படுகொலை

## ஏறாவூர் ஐயங்கேணியில் கொடூரம்

ஏறாவூர், ஐயங்கேணி பகுதியில் 24 வயது, இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் பற்றி தெரிய வருபவை வருமாறு :–

கொழும்பு – 9, ஊருகொடவத்தையை சேர்ந்த மொகமது சபீக் என்பவர் ஐயங்கேணி பகுதியை சேர்ந்த ஷியாமியா(வயது 24) என்பவரை அண்மையில் திருமணம் செய்திருந்தார். நேற்று மாலை ஷியாமியா கொலை செய்யப்பட்ட நிலையில் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

திருமணம் முடிந்து 9 நாள்கள் கடந்த நிலையில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அடித்து வயரால் கழுத்து நெரிக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், கணவரான நவாஸ் மொஹமட் சபீக் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே குறித்த நபர் வேறு பெண்ணை திருமணம் முடித்து, விவாகரத்து செய்த பின்னரே இந்தப் பெண்ணை அண்மையில் திருமணம் செய்துள்ளார். மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் தொடர்கின்றனர்.

# கடற்படை சிப்பாய்கள் பாதிப்பு 771 ஆக உயர்வு

## வெளிநாடுகளிருந்து வந்தவர்களில் 559 பேர் தொற்றுடன் அடையாளம்

கொழும்பு, ஜூன் 04

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 808 பேர் அடங்குகின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதில் 771 பேர் கடற்படையினர் எனவும், அவர்களில் 418 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் கடற்படையின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்களில் 559 பேர் இதுவரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2020 இல் வெளியிடப்பெற்றது.